www.tamilarangam.net



P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIÈRES SUR -
- SEINE ; FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1990 ஐப்பசி மார்கழி ஓசை 1 ஒலி 4

## இந்த இதழில்...

கருத்து

வசந்தன் மணிக்கதைகள்

அடக்கம்

கிருதயுகம் வளர்கிறது

வைகுந்தனுடன் சில நிமிடங்கள்

எப்பொருள் யார் வாய்க் கேட்பினும்

இலங்கை: கருத்தும் கண்ணோட்டமும்

நான் வருவேன்

நட்பு

யார் இந்த யாழ்ப்பாணத்தான்?

"டோபின்" பூங்காவினுள்ளே...

நம்பிக்கைகள் கண்ணாடி வார்ப்புகள் அல்ல

தென்றலாயிருப்பினும்

கலையும் இலக்கியமும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கருத்து

மொழி வழி இனம் காண்கின்ற உலக வழக்கில், தமிழ் முஸ்லீம் மக்கள் இலங்கையில் ஒரே இனத்துள் அடங்குவர். இலங்கையில் மதவாரியான இந்து முஸ்லீம் மக்கள் இனத்தால் தமிழினம். முஸ்லீம் மக்கள் தமிழே தாய் மொழியாகியுள்ளவர்கள். கல்வி, கலை, இலக்கியம், அரசியல் அனைத்திலும் தமிழே தாய் மொழியாகக் கொண்டவர்கள். இந்து, கிறிஸ்தவத் தமிழர்களைக் காட்டிலும் பௌத்த கிறிஸ்தவச் சிங்களவர் மத்தியில் அதிகம் பரந்து வாழ்ந்து தமிழ் மொழியைச் சிறப்பித்தவர்களும், வலுவூட்டியவர்களும் முஸ்லீம்களே.

1914ம் ஆண்டு சிங்கள, முஸ்லீம் மக்கள் மத்தியில் ஏற்பட்ட கலவரத்தின்போது, தமிழ்த் தலைவர்கள் சிங்கள மக்கள் சார்பாக நின்று முஸ்லீம் மக்களைப் பாராதீனப் படுத்திய போதும், முஸ்லீம் மக்கள் தமிழ் மக்களை ஒருபோதும் பகைத்துக் கொண்டவர்களில்லை. மாறாக, 1958லிருந்து 1983 வரை இலங்கையில் நடந்த இனக்கலவரங்களில் தமிழ் மக்களைக் காப்பாற்றியதும் தமிழ் மக்கள் சார்பாக இயங்கியதும் அதிகமாக முஸ்லீம் மக்களே.

1948ல் யூ.என்.பி அரசு தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமையைப் பறித்தபோது அன்றைய தமிழ்த் தலைவர்களில் ஒரு பகுதியினர் அதற்கு ஆதரவு வழங்கியும், தோட்டத் தொழிலாளர்கள் அதனைப் பொருட்ப் படுத்தாது எப்படித் தமிழ் மக்கள் உரிமைகளுக்கு அனுசரணையாக இருந்தார்களோ, அப்படியே முஸ்லீம் மக்களும் தமிழ் மக்களின் உரிமைகளுக்கு என்றும் உறுதுணையாகவே இருந்தார்கள்.

இன்று தமிழ், முஸ்லீம் மக்களுக்குள் வேண்டாத, வெறுக்கத் தக்க, வெட்கப்படத்தக்க பகையுணர்வு தீய சக்திகளினால்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றது. தமிழ் முஸ்லீம் மக்களுக்குள் பிரிவினைத் தீயை மூட்டிவிடும் சக்திகளுக்கு எத்தரப்பினர் பலியாகினும் எம்கரங்களை நாமே வெட்டி வலுவிழந்தவர்களாவோம்.

அதிகார வர்க்கம் தரை, கடல், அகாய மார்க்கமாகத் தமிழ் இனத்தை அழிக்கின்ற இந்தவேளை, தமிழ் முஸ்லீம் மக்கள் மேலும் இறுக்கமாக சகோதரத்துடன் வாழ வேண்டிய கட்டத்தில் நமக்குள் நாம் பகைத்துக் கொள்வது நல்லதல்ல.

இலங்கையில் பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டுமென எவ்வாறு கோரப்படுகின்றதோ அவ்வாறே சிறுபான்மை இனத்துள் சிறுபான்மையாக வாழும் முஸ்லீம் மக்களின் தனித்துவமும் தமிழ் மக்களால் அங்கீகரிக்கப் படல்வேண்டும். முஸ்லீம் மக்களின் தனித்துவம், தமிழ் மக்களால் முற்று முழுதாகப் பேணப்படும் போதுதான் தமிழ் இனத்தின் சகல உரிமைகளும் சரியாகப் பேணிப் பாதுகாக்கின்ற சூழ்நிலை உருவாகும்.

தமிழ் முஸ்லீம் மக்களுக்குள் வேண்டத்தகாத இந்தப் பகைநிலை சிறுபான்மை இனத்தின் சுய நிர்ணய உரிமைப் போராட்டத்தைப் பின் தள்ளுவதோடு, அந்நியத் தலையீட்டுக்கும் வழிவகுக்கும். இதனை மையப்படுத்தி எந்தவோர் அந்நியநாடும் இலங்கை மண்ணில் கால் பதிக்கும் நிலையை எத்தரப்பினரும் தோற்றுவிக்கக் கூடாது. இவ்விஷயத்தில் மானுட விடுதலையின் பால் அக்கறை கொண்ட அனைத்து சக்திகளும் விழிப்புடன் செயற்படவேண்டும்.

ஆசிரியர் குழு

★

தொடர்பு முகவரி:

"OSAI"
R.RAJAGOBAL.
5, RUE HERMEL,
75018 PARIS.
FRANCE.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அடக்கம்

தம்பி தலையில் குட்டினான்.
"எதற்காக...? என்று கேட்டேன்.
ஆணோடு சரிநிகரோ
அடங்காத குமரி என்றாள் அம்மா.
அடங்கினேன் மௌனித்து.

அறிமுகமில்லாத
ஒருவனின் முன்னால்
உட்கார வைத்தனர்.
அப்போதும்
அடக்கமாய்
தலை குனிந்திருந்தேன்.

மஞ்சள் கயிறில் தங்கப் பதக்கம்
நெஞ்சைத் தொட்டது.
அடக்கத்திற்கு
பாராட்டென எண்ணிக் கொண்டேன்.

வலதுபாதம் பதித்து
உள்ளே அழைத்தனர்.
உட்புகுந்தபின்
திரும்ப நோக்கினேன். படிக்கட்டுக்களை
புதிய கோடுகள்
கிழிக்கப் பட்டிருந்தன.
அடக்கத்துக்குள் அடக்கம் பண்ணப்பட்டு
அநேக காலங்களென்பதை
இப்பொழுதுதான் புரிந்து கொண்டேன்.

(புரியாதது: இது எத்தனையாவது
திருத்தச் சட்டமென்பது)

பா
ஓ
பா
ர
தி!

www.tamilarangam.net

சிறுகதை

எஸ். அகஸ்தியர்

# கிருதயுகம் எழுகிறது...

"இரணியனுக்குப் பிரகலாதன் மாதிரி, என்னை முடிவு கட்ட இவன் எனக்குப் பிறந்திருக்கிறான்"

கந்தசாமிப் பிள்ளை மகனை முனிந்து கறுவினார்.

குமார் முன்வளவு ஒற்றையடிப்பாதையால் ஆடுகொல்லி ஒழுங்கையூடே பனங்கூடலைத் தாண்டி மறையும்வரை, கந்தசாமிப் பிள்ளை வெறித்துப்பார்த்தவாறு நின்றார்.

"மனோன்மணிய வளவால கலைக்கிற கெட்டித்தனத்தை நானும் பார்க்கத்தான் போகிறன்" என்று மகன் முகத்திலடித்த மாதிரிக் கர்ஜித்தானே, அதன் அர்த்தத்தை மனசுள் சித்தரித்போது அவர் நெஞ்சு நெக்குருகிற்று.

'பொலிசில சொல்லி இவனை "அச்சறிக்கை" பண்ணி வைப்பமோ....?'

இலங்கையில் பிரிட்டிஷ் சக்ராபத்தியம் புரிந்த பின் அதன் அவதாரமெடுத்த கந்தசாமிப் பிள்ளை, தன்னோச்சமாக அயல்நிலம் காணிகளை அபகடம் செய்து, நிலவுடமைக்காறனாகி, அந்த ஆதிக்கப் பலத்தைக் காட்டியே மனோன்மணியையும் தன் இச்சைக்கு இணங்கவைத்தவர்.

இத்தனை காலமாக அவர் "சுதந்திர"மாக அனுபவித்து வந்த இன்பசுகத்தை இந்தப் "பிரகலாதன்" கெடுத்து விடுவான் என்று தன்னுள் குமுறினார்.

தனது நடத்தை சமூக விரோதச் செயலாக, ஒழுக்க நெறி கெட்டதாக அவர் உணராதபடி அவரின் தன்னாதிக்கம் தடுத்தாட் கொண்டதை அவரே அறியாமல் பேதலித்து நின்றார்.

'இவன்ர "எடுப்பைப் பார்த்தா, எக்கணம் வில்லங்கத்தில்தான் முடியும் போலக் கிடக்கு....'

மண்டை பிளக்கிற யோசனை.

நாம்பன் மூசுகிற சாடை ஒரு பெரு மூச்சு. நாடி தளர்வதான ஒரு வித சோர்வு.

'ஒருவேளை இவன் மனோன்மணியின்ர பரமேஸ்வரிப் பெட்டையில கண் வைச்சிட்டானோ? அந்தச் சினைப்புத்தான் என்னை எதிர்த்துப் பேச வச்சிருக்கு....'

மனைவியை முறைத்துப் பார்த்தார்.

அவள் வயிறு தகிக்க, படலைக்கு வெளியே மகன் சென்ற திசை நோக்கி மலாரடித்து நின்றாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர் ஆவேசமாக வைத்த சத்தம் காதில் அதிரடித்து விழுந்தது.

"டியே, அவன் ஊரில உள்ள விடுகாலியளோட திரிஞ்சிட்டு வருவான். நீ உதில நிண்டு சாவக் கண்ணீர் விடாம, உன்ர வேலையைப் பார்"

'மனிசனாட்டமா நிக்கிறார்? இப்ப வாய் குடுத்தா வீண் வம்பிலதான் முடியும்'

வாய் திறவாமல் நெட்டுருவிப் பார்த்தாள்.

ஆசைப் பிள்ளையப்பாவின் குழுமாடு ஒன்று திமிறி, கட்டை அறுத்து ஒழுங்கைக்கு குறுக்கே நின்று, கன்றுக் குட்டியைத் தாயண்டை விடாமல் குதறிப் பாய்ந்து மூசுகிறது.

வானத்தில் ஏகாந்தமாய்ச் சஞ்சரித்த வல்லூறு பனங்கூடலுக்கு மேலாகப் பறந்து வட்டமிடுகிறது.

சின்னாச்சிப் பெத்தாச்சி கொஞ்ச நேரத்துக்கு முன்தான் கோழிக் குஞ்சுகளைக் கரப்பு திறந்து விட்டிருந்தா. கண் வைத்த வல்லூறு குஞ்சுகளை இறாஞ்ச வட்டமிடுகின்றது. தாய்க்கோழி நிலத்தை வறுகிக் கொக்கரிக்கின்றது.

'குஞ்சுகளைக் காப்பாத்த, தாய்க் கோழி படுற அக்கப்பாடு...'

"கோயா...கோயா....கோயா..."

கேருந்தொனியில் தொண்டை புடைக்க வானத்தைப் பார்த்துக் கத்துற பெத்தாச்சி.

கோழி கொக்கரித்துக் குஞ்சுகளை எச்சரிக்க, குஞ்சுகள் அறுகம் பற்றைக்குள் பதுங்குகின்றன.

தாய்க்கோழி முற்றத்தை வறுகிற்று.

'தாய் செத்தாலும் குஞ்சுகளைக் காக்கும். இந்த மனிசன் என்ன கொடுமைகளைச் செய்தாலும் நான் பெத்த என்ர குஞ்சைக் காப்பாத்தாமல் விடுறேல்ல'

அவர் சள்ளை "தொழ தொழ"க்கக் கனைத்தார்.

"ஏய், உதென்ன செய்யிறாய்....மோன் எனக்குக் கொள்ளி வைக்க வெளிக்கிடுறான். நீ உதில நிண்டு நெருப்புக் குடுக்கப் போறியே....?"

"அ...அவன் அப்படியான பிள்ளையில்ல. நீங்கதான் ஊரவைய அபகரிச்சு என்ர குடும்பத்துக்குக் கொள்ளி வைச்சிருக்கிறியள். இல்லாட்டி, பெத்த பிள்ளையப் பார்த்து "போடா வெளியால" எண்டு சொல்ல மனம் வருமே?"

"டியே, பெத்த தேப்பனெண்டும் பாராம அவன் என்னோட மதிப்பில்லாமல் எதித்துக் கதைக்கேக்க, நீ "விடுப்பு"ப் பார்த்துக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டுதானே நிண்டனி?"

"நீங்க பெத்த தேப்பன் மாதிரியே நடக்கிறீங்கள்?"

"ஆமோ, அப்படியோ...பின்ன என்ன மாதிரி நடக்க வேணும்?"

"உங்களுக்கு இந்த வயசிலையும் உந்த "எழுப்ப"மெண்டா, இளந்தாரிப் பிள்ளைக்கு எப்படி இருக்கும்....? அவன் மற்றவையளைப் போலக் "கள்ளக்கூத்தி" பிடிச்சுத் திரியிறானே ....?"

அவள் மறைபொருளாகக் கொடுத்த அடி, கந்தசாமிப் பிள்ளைக்குச் செப்பமாக உறைத்தது. ஆள், கெம்பிக் குதித்தார்.

"ஆமோ, அப்புடியோ... உதென்ன இண்டைக்குப் புதுக்கதை....?"

"ஏன் கோவிக்கிறியள்; அப்படித்தானே நடக்குது.? அதை எதிக்கிறதாவதானே என்ர பிள்ளைய வீட்டை விட்டுக் கலைக்கப் பார்க்கிறியள்....?"

"டியே, கனக்கக் கதைக்க வெளிக்கிட்டாச்சோ... பொத்தடி வாய்"

ஹிட்லர் துடுப்பை இலங்கை ஜே.ஆர்.பாணியில் தத்தெடுக்கலானார்.

கை ஓங்கிக் கொண்டு, கவடு பாய்ந்து ஆவேசமாக ஓடின கந்தசாமிப் பிள்ளை, வேட்டி தடக்கி முகம் குப்புற விழுகிற சாடை நிலமடிபடச் சரிந்தபோது, அவள், "ஆ, ஐயோ" என்று பரிதவித்துக் கொண்டு அவரை அவ்க்காகத் தூக்கி நிறுத்தினாள்.

அவள் அரவணைத்த கரங்களை இழுத்து உதறிவிட்டு உன்னி எழுந்து மறுபடியும் வீறாகப் பாயும் தருணம், "தம்பி கந்தசாமி, உதேன் அவள் பாவியில ஏறிப் பாயிறாய்?" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தார்.

ஆசைப்பிள்ளையப்பா மாட்டுவடக் கயிறு சகிதம் கிணற்றடி ஆடுகாலுக்கு எதிரே நின்றார்.

'அயல் வீட்டுக் காறரும் இப்ப "நாயம்" கேக்க வெளிக்கிட்டிட்டினம்'

கந்தசாமிப் பிள்ளை அசந்து போனார். கைகால் ஏவுகிறதாயில்லை. அப்பாவில் ஆத்திரமாக வந்தது.

"என்ர "தறுதலை" ஒண்டால இப்ப "பொடுகுதடி"யளுக்கும் நிரேத்தம் பிடிச்சிருக்கு"

"ஆசையண்ணை, இது எங்கட குடும்ப விஷயம்.... இதில மற்றவைக்குக் கதை காரியம் தேவையில்லை. சொல்விப் போட்டன். மட்டு மரியாதையா நடந்து கொள்ளுங்கோ"

www.tamilarangam.net

'எட வப்பி, நீ மட்டும் ஊரை வறுகி மற்றவையின்ர குடும்பங் களைக் குலைக்கலாமோ?' என்று விடுத்துக் கேட்க அப்பா நினைத்தார். மனம் துணியவில்லை.

'என்ன கொடுவினை செய்வானோ....?'

அப்பா ஏளனமாகச் சிரித்துக் கொண்டு வடக்கயிற்றைக் கதியாவில் கொழுவிவிட்டு, கயிறு முடிச்சுத் தெறிப்புகளைச் செப்பனிடலானார்.

'உவற்ர திமிரை அவன் குமார்தான் அடக்கி வைப்பான். இந்த நாசமறுப்பான்ர வயித்தில உந்தத் தங்கமான பொடி வந்து பிறந்ததே?

நள்ளிரவு.

இருந்தாற்போல் நாய்கள் அம்மாறு போட்டுக் குரைத்தன.

அயல் பொடியங்கள் "செக்கண்ட் ஷோ" படம் பார்த்து முடிந்து கிராமத்துக்கு வந்து விட்டார்கள்.

குமார் எப்படியும் திரும்பி வந்து விடுவானென்று தாய் மனசில் தேக்கி வைத்த நம்பிக்கை தகர்ந்து விட்டது. திக்கெல்லாம் மகன் உருவமே அவள் கண்ணில் தெரிந்தது.

கந்தசாமிப்பிள்ளை விடும் குறட்டையைத் தவிர வேறு அரவம் காதில் விழவில்லை.

'சோறு நாறிப்போம். தண்ணியை ஊத்துவம். வந்தால் புழிஞ்சு குடுப்பம்'

பானைக்குள் தண்ணீர் ஊற்றிவிட்டு வயிறு கூம்பக் கிடந்தாள். பற்றிய பசியை விட பெற்ற வயிறு பாசத்தால் அகோரித்தது.

'தனக்கெண்டிருக்கிற மாடி வீட்டில ராசாபோல இருக்க வேண்டிய என் பிள்ளை இந்த அரக்க மனிசனால ஊண் உறக்கம் வீடு வாசலில்லாமல் அலையுது. எல்லாம் உந்தத் * அந்தத் தேவடியாள வளவுக்கால எழுப்பினால்தான் என்ர குடும்பம் சீராகும்'

* தோறை மறேன்மணியெண் டவளால வந்த வெள்ளிடி...

கந்தசாமிப்பிள்ளை புரண்டு படுக்கிறவாக்கில் வாய் புசத்தலானார்:

"அவன் எங்க போவான். குண்டி வத்த திரும்பி வந்திடுவான். நீ உன் பாட்டில வந்து படு"

இவள் உற்றுப் பார்த்தாள். அவர் நல்ல உறக்கம். முழி கள்ள ரும் விழி உறங்கும் நேரம்.

இரவு மூன்று மணி.

அவள் அயர்ந்து போனாள்.

தனக்கும் தகப்பனுக்கும் வெடித்த மோதல் - உண்டான

www.tamilarangam.net

முரண்பாடு - எழுந்த தகராறு - நிகழ்ந்த சம்பவங்கள் அனைத்தையும் விளக்கி நேற்றுத்தான் தங்கராசனுக்குக் குமார் விஸ்தரித்திருந்தான். அப்படியிருக்க, அதிகாலையில் வந்து தன்னை எழுப்புவானென்று தங்கராசன் சற்றும் எதிர்பார்க்க வில்லை.

'வீட்டில ஏதோ சில்லெடுப்பாக்கும்......?'

"என்ன மச்சான், ஏதும் பிரச்சினையோ?"

"இல்லையடப்பா. நேத்து உன்னோட பறைஞ்சிட்டு ஒரு பிளானோட வீட்ட போனன். வேற ஒரு எண்ணம் வந்தது. உடன திரும்பியிட்டன்"

தங்கராசன் சிரித்தான்.

"அதுவும் சரிதான், பெட்டையில கண்போட்டால் மனம் கேக்காதுதான். இப்ப நீ மற்ற வளத்தால "பிளான்" பண்ணுறது கொய்யாவுக்குத்தான் நல்ல அடி. ஆனா, நீ மனோன்மணிக்காக ஏவங் கேட்டதிலும் பார்க்க, பரமேஸ்வரிய விரும்புறதை அறிஞ்சால் கொய்யா "ஹார்ட் அற்ரக்" வந்து குளோசாவார்"

"உது விசர்க்கதை. நீ நினைக்கிற மாதிரி நான் பரமேஸ்வரியக் கனவிலும் நினைக்கேல. அதால இந்தப் பிரச்சினை தீருமெண்டு நம்புறவனுமில்லை. இது நிலவுடமைக் காறங்களுக்கும் நிலமில்லாத ஏழைச்சனங்களுக்கும் உள்ள பிரச் சினை. அநியாயம் செய்ய வசதியான இந்த அமைப்பை உடைக்காமல் முரண்பட்ட வர்க்கங்களுக்குள்ள நடக்கிற சமரசம், கல்யாணம், காந்தர்வம், காதல், கலப்புமணம், பெண் கடத்தல், சதி, சூழ்ச்சிகளால் எதையும் சாதிக்க முடியாது. இதை உணராமல் என்னையும் தன்னிச்சைக்காறனாக மதிச்சாயே, இவ் வளவுதான் நீ படிச்சுக் கிழிச்ச சித்தாந்தம்..."

குமார் சரியான ஒரு சமுதாயப் பார்வையுடன் ஆவேசங் கொண்டு துடிப்பதைக் காண, அவன்மீது தங்கராசனுக்கு வாஞ்சை எடுத்தது.

"நீ என்ன "பிளான்" போட்டனி?"

"இருக்கிற வீடு வளவு காணியள பிள்ளையோட்டப் பங்காக எழுதுவிச்சுப் போட்டு, அந்தக் காணியில நாலைஞ்சு பரப்பை மனோன்மணி குடும்பத்துக்கு அறுதியாக எழுதிக் குடுக்கப் போகிறன் "

"இப்ப உனக்குத்தான் விசர். இப்படித் தனிப்பட்ட விசயங்களைச் செய்யிறதால சமுதாயப் பிரச்சினை தீருமெண்டு நினைக்கிறியே?"

"இல்லை. இது ஐயா செய்த அடாத்துக்கு ஒரு விமோசனம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிறகு ஆரும் அதுகளை வெருட்டிக் குடி எழுப்ப ஏலாது "

"பேந்தேன் பின்னடிக்கிறாய்?"

"என்ர பாகத்தைப் பிரிச்சுத்தாவேண்டா அம்மா ஏங்கிச் சாவா. அதுதான் கொஞ்சம் ஒஞ்சிக்கிறன்"

"நீ இந்த இடத்திலதான் பிழை விடுகிறாய். உனக்கும் கொய்யாவுக்கும் ஏன் கொழுவல் வந்துதோ அந்த மட்டத்தில்தான் இதை நிவிர்த்தி பண்ணவேணும். நீ போட்ட திட்டம் கொம்மாவுக்குத்தானே வாசி? இதைக் கொய்யா தெரிஞ்சால் இதையே பாவிச்சு அவர் பலவானாகி விடுவார் "

"அது சரிதான்ரப்பா. ஐயா என்ன பிழை விட்டாலும் அம்மா "போத்து மூடி" நடப்பாவே தவிர, பாதகமாக நடக்கமாட்டா. அதுதான் வில்லங்கம்"

"அப்ப ஒண்டு செய்யன்".

"என்ன?"

"நீ நேர கொம்மாவிட்டப்போய் உன்ர திட்டத்தை வடிவா விளக்கிச் சொல்லு. அவ சம்மதிச்சால் சரி. இல்லாட்டி மற்ற வழியப்பார்"

"ஓம் மச்சான். இது நல்ல "ஐடியா"தான்".

கொலைஞனுக்கும் தண்டனை வழங்காமல் மன்னிப்பு அளிக்கும் நீதிமன்றம் தாயின் இதயம் என்பதைக் குமார் அறிவான். அப்பேர்ப்பட்ட மாதாவின் மனசைப் புண்படுத்தினமேரை தகப்பனுடன் மோதிக்கொண்டு வெளியேறியபோது படலைவரை ஓடிவந்து "தம்பி, இஞ்ச வா ராசா" என்று தாய் ஓலமிட்ட பரிதாபக் கோலம் குமார் நெஞ்சை அழுத்த, மெதுவாக வீட்டுப் படியேறினான்.

மகனைக் கண்டதும் பூவாக விரிந்த முகம் "சடா"ரென்று சூம்பிற்று.

"இதென்டா உன்ர கோலம்?. இதைக் கண்ணால பார்க்கிறதைவிட எங்கேயன் ஆத்தில குளத்தில விழுந்து சாகிறன். பிறகு தேப்பனும் மோனும் கொழுத்தாடு பிடிச்சு மல்லுக் கட்டுங்கோ"

ஒப்பாரி வைக்கிறசாடை தலையைத் தடவி விட்டு அடுக்களைப் பக்கம் சென்ற தாயை நிதானித்துப் பார்க்கையில் அவன் கண்கள் கலங்கின.

விறாந்தையில் நின்று அறைகளை நோட்டம் விட்டவனாக, 'ஐயா எங்க?' என்கிற தோரணையில் மிலாந்தினான்.

"கொய்யா உன்ர அலுவலாகத்தான் வெளிய போனவர். இப்ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வந்திடுவார். யோசியாமல் வந்து சாப்பிடு"

"என்ர அலுவலோ... என்ன சங்கதி?"

"சும்மா கிடந்த "கண்டது கடியது"களெல்லாம் வெளிநாடுகளுக்குப் போட்டுதுகள். நீ படிச்சுப்போட்டு ஊர் சுத்தித் திரிஞ்சால் உன்ர மதிப்பென்ன?"

"ஓ, அப்படியே சங்கதி?"

ஏதோ சொல்ல வாய் உன்னினான். இடையில் கந்தசாமிப் பிள்ளை வைத்த குரல் "கணீ"ரென்று விழுந்தது.

"ஓ.... மாப்பிள்ளை வந்திட்டார்போல... என்ன வலு சுறுக்காத் திரும்பியிட்டார்......?"

"அ....அ....சும்மா அலட்டினது காணும்,பேசாம இருங்கோ. போன காரியம் என்ன மாதிரி?"

குமார் சாப்பிட்ட கை அலம்பிவிட்டு மௌனமாக வெளியே வந்தபோது, கந்தசாமிப்பிள்ளை மனைவியைப் பார்த்து அவனுக்கே சொல்கிறார்:

"யூகேக்கு அனுப்பி வைக்கிற கருமங்களை ஒப்பேத்தித் தந்தி டெண்டு பாலசிங்கத்திட்டப் பாரங் குடுத்து முழுக் காசும் குடுத்திட்டன். ரண்டு கிழமைக்குள்ள அந்தாள் எல்லா அலுவலையும் முடிச்சிடும். இந்த மாதக் கடைசியில இவன் "பிளேன்" எடுக்கவேண்டி வரும்"

"இந்தப் பெரிய தொகையை அந்தாளை நம்பி எப்படிக் குடுத்தியள்? எக்கணம் ஏமாத்திப் போட்டால் பிறகு தம்பி லண்டனுக்குப் போனபாடுமில்ல, குடுத்த காசும் திரும்பி வராது"

"நீ ஆளை அறியாமல் கதைக்கிறாய். அந்தாள் என்னோட இருவது வரியம் பாலும் தேனுமாகப் பழகினது. மிதிச்ச இடத்துப் புல்லுச் சாகாது. ஒவ்வொரு கிழமையும் சாயிபாபா பஜனை வைச்சு அன்னதானங் குடுக்கிற தருமசீலன். வெள்ளி செவ்வாய் விரதகாறர். அந்தாளை உப்படிச் சொன்னால் நாக்கில புத்தெடுக்கும்"

குமார் அமைதியாக் கேட்டுவிட்டுக் கேலியாகச் சேரிச் சிரித்தான்.

"சாயிபாபாக்காறனெண்டா நிட்சயம் எமில்சவுந்தரநாயகமாக இருப்பார். அம்மா, இவர் பஜனைக் காறரிட்ட ஏமாறட்டும். நான் ஆரிட்டயும் ஏமாறமாட்டன். உந்தத் திட்டம் - உந்தப்புலுடா என்னில பலிக்காது....."

தாய் இடிந்து போய், நாடியில் கை வைத்துக் கொண்டு, 'ஏன் இப்படிச் சொல்கிறாய்?' என்பதுபோல் பார்த்தாள்.

தன்னையொத்த இளைஞர்கள், யுவதிகள் பிறந்த மண் பெயர்ந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேலை தேடி வெளிநாடுகளுக்கலையும் நிர்ப்பாக்கியத்தை, இந்த அவலங்களுக்கு ஆக்கிவிட்ட சமுதாய அமைப்பை விரைவில் தகர்த்தெறியாவிடில் இந்த நாடே அனாதையாகிவிடும் என்று குமார் ஆவேசித்தான்.

இந்த அநியாயங்களைத் தட்டிக் கேட்கவா, இதன் சூத்திரதாரிகளை இனங்கண்டு போராடவோ வக்கின்றித் தமக்குள் நான்கு பதினெட்டுச் சாதிகள வைத்துப் பேதமை கொண்டு நாடு, நகர், உற்றம், சுற்றம், இனம், சனம், கலை, இலக்கியம், கலாச்சாரம்,, பந்தபாசப் பிணைப்புகளுமற்று, சிறுசிறு "குட்டிப்பகைக்காரன்"களாகிற நப்பாசையில், தங்கள் பலத்தையே எதிரிகளின் காலடியில் சரணாகதியாக்கிவிட்டு, "ஹிப்பிஸ்" கோலத்தோடு வெளிநாடுகள் விரையும் இந்த இளைஞர்கள், யுவதிகளை நினைத்து அவன் சீற்றங்கொண்டான்.

'இவனைப் பிற நாட்டுக்கு அனுப்பியபின் கரைச்சல் தீரும்' என்ற தனது நோக்கத்தை இவன் அனுமானித்தே இந்த வாய்ப்பை உதறி எறிகிறான் என்று புரிந்து கொண்ட கந்தசாமிப்பிள்ளை, வெப்பிரசாரத்தில் தன்னாரவாரம் குமுறிக் கொண்டு, ஏதோ சிந்தனையிலாழ்ந்தவராக, அவசரகோலத்தில் செருப்பை மாட்டிக் கொண்டு வெளியே புறப்பட்டதை அவதானித்த குமார், தான் போட்டிருந்த திட்டத்தைச் சற்றுத் தயக்கமாக விஸ்தரித்துக் கூறிய போது, தாய் தேகங்கமாரிட்டவளாக, நெஞ்சைப் பொத்திக் கொண்டு அதிர்ந்து போய் நிலத்தில் குந்தினாள்.

'ஆ....நான் சுமந்து பெத்து வள த்து ஆளாக்கிப் படிக்க வைக்க, இந்தப் பிள்ளை ஊருக்கு மாரடிக்கவும், தேப்பனோட கொழுவிக்கொண்டு கோடேறவும் வெளிக்கிட்டிட்டானே.....'

தாயின் துயரமும் பரிதவிப்பும் அவளுள் அகோரித்து, கண்கள் குமுழ்த்திப் பீறிட்ட கண்ணீர் இவன் இதயத்தை ஊடுருவிற்று.

"அம்மா, நீ ஏனணை வீணா க் கலங்கிறாய்? ஐயா செய்யிற அட்டாகசங்களுக்கும் அடாத்துகளுக்கும் நானே பழி? நடக்கப்போறதை இருந்து பாரணை.... சந்தோசப்படுவாய்"

'எப்படியோ தன் புத்திரன் சத்தியவந்தன், மனிதாபிமானி, நேர்மையானவன், தகபபனென்றும் பாராமல் சமதர்ம நீதிக்காக வாதாடுகிறவன் என்பதில் இவள் தாயுள்ளம் உள்ளூரப் பெருமிதப் பட்டது.

'என்ன நினைத்துக் கொண்டு இப்படித் திடமாக உறுதி கூறினான்' என்று இவள் புரியாதபோதும் மகனில் கொண்ட நம்பிக்கையில் அவள் முகம் மலர்ந்தது.

'என்ன செய்யப் போகிறான், என்ன நடக்கப் போகுது?'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவன் கூறிய சங்கதிகளை நிதானமாகச் சீர்தூக்கிப் பார்த்த அவள் மனசில் மெல்ல ஒரு சலனம் தட்டியது.

தான் இருக்கவே தனக்கே துரோகம் பண்ணி, பெற்ற பிள்ளையோடும் "ஏதண்டை"ப் படுகிற புருஷன், தானில்லாக் காலம் முழுச்சொத்தையும் தானே அபகரித்துக் கொண்டு இவனை ஊதாரியாக அந்தரிக்க விடுவாரென்ற ஓர் ஏக்கம் இடியேறாக இந்தத் தாய்ச் சுரங்கத்துள் விழுந்தது.

குமார் கேட்டபடி தன் பாகத்தையும் சேர்த்து அவனுக்கு இப்பவே எழுத விரும்பினாளாயினும், கந்தசாமிப்பிள்ளைக்குத் தெரியாமல் இந்தக் கருமத்தை எப்படிச் செய்து முடிப்பது என்ற விசனத்தில் ஒரு கணம் தத்தளித்தாள்.

தனது ஒப்புதலை இப்பவே தெரிவித்து விட்டால் மைந்தன் சந்தோஷப்படுவான் என்ற ஓர் ஆதங்கத்தோடு "டே தம்பி, அறைக்குள்ள நிண்டு என்ன செய்யிறாய்?" என்று வாயொச்சமாகக் கூப்பிடும்போது......

படலை அடிபடச் சாத்திவிட்டு, வெகு அட்டகாசமாகக் கெம்பிக் குதித்துக் கொண்டு, "ஏய், உவன் உங்க நிக்கிறானோ?" என்று கனைத்தவாறு வந்த கந்தசாமிப்பிள்ளை, "உன்ரமோன் "பாகப்பிரிவினை" நடத்தப்போறானாம், எங்கயடி அவன்?" எனக் கேட்டுப் பற்களை நறுமிச் சன்னதம் போட்டார்.

"ஓ, நடத்தத்தான் போறன்"

குமார் பதறாமல் அவர் "நெத்திநேட்டாக" நின்றான்

"டே, அப்படியும் ஆணவமோ? வடுவா இப்பவே வீட்டை விட்டு வெளிக்கிடு. இல்வாட்டி "மேடர்"தான் நடக்கும்"

"ஐயா, நான் இனி அதுக்கும் தயார் - எதுக்கும் தயார்!"

அவன் கண்கள் நெருப்புத் தணலாகச் சிவந்தன.

விக்கித்துப்போன கந்தசாமிப்பிள்ளை மின்கதிரடிபட்டவராக, முழிகள் பேந்திப் பிதுங்க நிலை குலைந்து "திக்"கிட்டுப் போய், வெறுஞ்சடலமாக நின்றார்.

அவர் தொண்டைக் குழிக்குள் உமிழ்நீர் "முடுக்"கிட்டது.



www.tamilarangam.net

# வைகுந்தனுடன் சில நிமிடங்கள்

-யசோதரன்-

சிவந்தமேனி, சின்னதாக ஒரு குறுந்தாடி. வாட்டசாட்டமான உடம்பு. கவர்ச்சியான இளைஞன். வயது இருபத்தைந்துக்கு மேல் இல்லை. சதா ஏதாவது சிந்தித்த வண்ணம் இருப்பான்.

வைகுந்தனுடன் கதைப்பதென்றால் எனக்கு அலாதிப்பிரியம். ஒவ்வொரு சம்பவங்களையும் நேரில் பார்ப்பது போல் சுவைபட எடுத்து வைப்பான். போலித் தன்மை கிடையாது. தெரியாதவற்றைத் தெரியாது என்றே ஒப்புவித்துக் கொள்ளும் நேர்மை அவனிடம் இருந்தது.

நீண்ட இடைவேளையின்பின் இன்று அவனைச் சந்தித்துக் கொண்டேன். "மெத்றோ"வினுள்ளேதான்....

"மெத்றோ" வண்டிகள் இருநிமிடத்திற்கொன்று போவதும் வருவதுமாக இருந்தன. அவன் ஏறவேண்டிய "மெத்றோ"வையும் விட்டு சம்பாஷிக்கத் தொடங்கிவிட்டோம். "மெத்றோ" வண்டியின் இரைச்சல் எரிச்சலைத் தந்தது. சினந்து கொண்டோம். வண்டி வரும்போது அமைதியாகி மீண்டும் வேகத்துடன் கதைத்துக் கொள்வோம்.

சுகநல விசாரிப்புக்கள், பரிஸ் வாழ்க்கை முறைகளைச் சுற்றிப் போய்க் கொண்டிருந்த உரையாடலை எமது நாட்டுப் பக்கம் திருப்பினேன்.

"சிலோனில இருந்து ஏதாவது ஒரு லெட்டேர்ஸ்......?"

"போன கிழமை ரண்டு வந்தது".

"நாட்டு நிலமைகள் என்ன மாதிரி இருக்காம்?".

புதினம் அறியும் ஆவலில் துருவினேன்.

"இன்னும் சனம் பதுங்கு குழியளுக்குள்ளதான். சாப்பாடுகள் இல்லை. பசி தாங்க முடியாமல் ஒரு குடும்பம் அவரிக்காய் அரைச்சுச் சாப்பிட்டிருக்காம். இப்பவெல்லாம் தாங்கள் பதுங்கிக் கொள்ளுறது பதுங்கு குழியா இல்லை, புதை குழியா எண்டது சந்தேகமாகயிருக்காம். ஏனெண்டால் சிலவேளை இதுவே தங்களுக்கும் புதைகுழியும் ஆகலாமாம். பதின்மூன்று வயசு, அக் காமகள் எழுதியிருந்தாள்".

இதைச் சொன்னபோது வைகுந்தனின் கண்கள் கலங்கிப் போனதை அவதானித்தேன். என்றுமில்லாதவாறு என்னையும் ஒருவித உணர்வு ஆட்டியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வயசு வந்ததுகள் ஒரு மட்டு. பச்சைக் குழந்தையளுக்கும் ஒண்டும் விளங்காது. ஆனால் அரைகுறையா, விபரங்கள் புரியத் தொடங்கிற மூண்டு நாலு வயசுக் குழந்தையள்! பொம்பர் குண்டுபோட, செலி சுட, சாப்பாடுகள் வேற இல்லை, ஓடிப்போய் அலுமாரிக்குள்ள ஒளிக்கிறதுகளும், வெருண்டுபோய் தாயின் சேலையைப் பிடிச்சுக் கொண்டு குழறுறதுகளும்....என்ன பாடு படுங்கள். எப்படித் துடிக்குங்கள். இதுகளின்ர பிஞ்சு மூளை நரம்பு கள் எவ்வளவு தூரம் பாதிக்கும்.

சீ... என்ன வாழ்க்கை அதுகளுக்கு. ஒரே மிக்கக் குண்டைப் போட்டு அழிச்சுவிட்டாங்களெண்டாலும் பரவாயில்லை.

வக்கிரமான நினைப்புத்தான். அதுகளின்ர கஷ்டங்களை நினைக்கேக்க இது தேவலை மாதிரிப்பட்டது எனக்கு.

"இந்த அரசாங்கத்தின்ர அட்டகாசங்களுக்கு ஒரு முடிவில்லையா?" வைகுந்தனைப் பார்த்துக் கேட்டேன்.

"அரசாங்கத்தில் மட்டும் பிழையளைப் போடேலாது. இந்தப் பிரச்சினையளுக்கு எங்கட தவறுகளும், பலகீனங்களும் ஒரு காரணம்தான். அதைமறுக்கேலாது. இண்டைக்கு ஆயுதங்களைத் தூக்க ஒவ்வொருத்தனும் நிர்ப்பந்திக்கப் படுகின்றான் எண்டது உண்மைதான். ஆனா, ஆரம்பத்திலை ஆயுதம் தூக்கின கன பேருக்குத் தெரியாது ஏன் ஆயுதம் தூக்கினம் எண்டு. அப்ப அது ஒரு கவர்ச்சி, ஒருவித அந்தஸ்து, இப்ப தெரியுது உந்தக் கவர்ச்சி யெல்லாம் எங்க கொண்டு போய் விட்டிருக்கெண்டு."

"இந்த ஆயுதங்களால சனத்துக்கு அமைதியைத் தேடிக் கொடுக்க முடியாதென்று சொல்லுறியா?"

எனது கேள்விக்கு நீளமாக ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டவன், மௌனமாகச் சிரித்தான்.

சிறிய மௌன இடைவெளி எம்மைக் கவ்வியது.

எனக்கு வெட்கமாகப் போய்விட்டது. முட்டாளத்தனமான எனது கேள்வியை நினைத்து நொந்து கொண்டேன்.

"அரசியலற்ற ஆயுதங்கள் பயனற்றவை என்ற உண்மையை இவ்வளவு கசப்பான அனுபவங்களுடாகவே நாங்கள் கற்றுக் கொள்ளவேண்டியிருக்கிறது" சலிப்புடன் கூறினான்.

"நாட்டில இருக்கிற புத்திஜீவிகளும் இல்லாமல் போகிறார்கள். அல்லது மௌனித்துக் கொள்கிறார்கள். இந்நிலையில் வெளிநாடுகளில் இருப்பவர்கள் ஏதாவது...." என்று இருந்தேன்.

"வெளிநாடுகளில் அதிகளவில் புத்திஜீவிகள் இருப்பதாகக் கருதுகிறாயா? கேள்வியை என்மீது திருப்பினான்.

www.tamilarangam.net

"ஏன் இல்லை".

"புத்திஜீவிகள் என்று யாரைக் கருதுகிறாய்? இங்கிருக்கும் எஞ்சினியர்கள், டாக்டர்கள் அல்லது ஆங்கிலம் கற்றுக் கொண்ட விற்பனர்களையா?"

அவன் முகம் சிவப்பேறியது.

"சமுதாயத்தைப் பற்றிச் சிந்திப்பவர்கள், ஆய்வு செய்பவர்கள், சமுதாயத்தை முன்னோக்கி நகர்த்த முயற்சிப்பவர்களுக்குத்தான் புத்திஜீவிகள் எண்ட பதம் பொருந்தும். மற்றவர்கள் எரிகிற வீட்டில் விறகு பொறுக்கும் விற்பனர்கள் அல்லது பொம்மை மனிதர்கள்".

"சமூகத்தைப் பற்றியே சிந்திக்காதவர்களுக்கு சமூகத்தில் ஏன்தான் இவ்வளவு அந்தஸ்து மரியாதை?"

"அது சமூகத்தின் அறியாமை"

"முற்போக்கு, சித்தாந்தம், சமூகம் பற்றியெல்லாம் கதைப்பவர்கள் மட்டும் நேர்மையானவர்களா?" நானும் விட்டுக் கொடுக்கவில்லை.

வைகுந்தன் அமைதியாகப் பேசத் தொடங்கினான்.

"முற்போக்கு விடயங்களைக் கதைப்பவனுக்கும் முற்போக்கு வாதிகளுக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. சமூகத்தை தன்னுடைய அறிவுத்தளத்தில் நின்று முன்னோக்கிப் பார்ப்பவன், அது பற்றிச் சிந்திப்பவன், முற்போக்குச் சிந்தனையாளன், முற்போக்குச் சிந்தனையாளன் முற்போக்குவாதியாகவும் இருக்க முடியுமென்பதில்லை. அது அவனுடைய நடைமுறை வாழ்க்கையைப் பொறுத்தது. ஆனாலும் முற்போக்குச் சிந்தனையாளர்களின் நடைமுறைத் தவறுகள் சரியான கருத்தியற் தளத்தைப் பலகீனப் படுத்துகின்றன என்பதை மறுப்பதற்கில்லை."

"இங்கு மார்க்சிய சித்தாந்தம் கதைத்துத் திரிபவர்களைப் பற்றி என்ன நினைக்கிறாய்? இவர்களுக்கு எமது மக்கள் மீது அக்கறையிருக்கிறதா?" நேரிடையாகவே கேட்டேன்.

"திரும்பவும் சொல்கிறேன். கதைப்பதை வைத்து ஒருவரை எடைபோட முடியாது. அது ஒருவரது நடைமுறைச் செயற்பாடுகளைப் பொறுத்த விடயம். அதேவேளை அவர்கள் கதைப்பது தவறு என்று தோன்றவில்லை. மார்க்சிய சித்தாந்தம் சமுதாயத்தை ஆய்வு செய்யும் விஞ்ஞானம். அது சார்ந்த அறிவை வளர்த்துக் கொள்வது தவறல்ல. அவசியமானதுங் கூட".

"ஆனால் மார்க்சியக்கலைச் சொற்களை வைத்துக் கதைப் பதைப் பலர் "பாஷனா"கக் கருதுகிறார்கள் என்றே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நினைக்கிறேன்.

"உண்மை. எமது விடுதலைப் போராட்ட எதிர்விளைவுகளில் இதுவும் ஒன்று. சித்தாந்தங்கள் "பாஷனாகி" அர்த்தங்கள் கொச்சைப்படுத்தப் பட்டு விட்டன. சிலர் புத்திஜீவிகளாகத் தம்மை காட்டிக் கொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்கிறார்கள்".

"இவர்கள் ஏமாற்றுப் பேர்வழிகள் இல்லையா?"

"ஏமாற்றுப் பேர்வழிகளாக என்னால் பார்க்க முடியவில்லை. இவர்களிடம் ஏதோ வித்தியாசமான உணர்வு இருந்தால்தான் சமூக விஞ்ஞானத்தைக் கற்றுக் கொள்ள வேண்டியிருந்திருக்கின்றது. அதேவேளை வர்க்க் குணாம்சமும் சேர்ந்து வெளிப்பட்டுக் கொள்கிறது. அவ்வளவுதான்".

"இவர்களை உண்மையானவர்களிடமிருந்து அடையாளங் காண்பது எப்படி?"

"அடையாளங் காண்பது, அல்லது அம்பலப்படுத்துவதென்பது புரட்சிகர ஸ்தாபனத்திற்கு, ஸ்தாபனத்திற்கு உள்ளே உள்ள வேலை, கடமையும் கூட. நாம் இதைப்பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என நினைக்கிறேன்.

ஆனால் இங்கே முற்போக்குக் கருத்துக்களைக் கொண்டவர்கள் கற்பனையில் செயற்படுவதுதான் கவலைக்குரியது"

"எதைக் கற்பனை என்று சொல்லுகிறாய்?"

"பிற்போக்குக் கருத்துக்கள், பிற்போக்குத்தனங்கள் முட்டி வழிகின்ற உலகம் இது. முற்போக்கு வட்டம் என்பது மிகச் சிறியது. இருப்பவர்களும் உதிரிகளாகவே. நிலமைக்கேற்ப செயற்படுவதென்பதை விடுத்து, யதார்த்தத்தை மறந்து, ஏ தோ புரட்சி உச்சக் கட்டத்திலிருப்பது போலவும், தாம் புரட்சிகரக் கட்சிக்குள் இருந்து வேலை செய்து கொண்டிருப்பது போலவும் நினைத்துக் கொண்டு செயற்படுகிறார்களே அதைத்தான் சொல்கிறேன்.

குறைந்த பட்சப் புரிந்துணர்வு அடிப்டையிலாவது இணைந்து வேலை செய்ய முடியாமல் தமக்குள் தாமே மோதி மேலும் சிதறுண்டு போவது வேதனைக்குரிய விடயம்.

இவர்கள் தமது வர்க்க குணாம்சத்திற்கேற்ப யார் அறிவாளி? என்ற கோதாவில் ஆளுக்காள அற்பத்தனமாக மோதிக் கொள்வதன் மூலம் எதிர்முகாமுக்கே தங்களை அறியாமல் வலுசேர்த்துக் கொள்கிறார்கள்.

இந்நிலை மாறவேண்டும். எங்கள் நிலை கவலைக்கிடமானது. உணர்ந்து கொள்வோம். எங்கள் மத்தியில் போலித்தன்மைகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேண்டாம். எங்கள் வர்க்கங்களைத் தெளிவு படுத்திக் கொள்வோம். உழைக்கும் வர்க்கத்தின் விடுதலையை விரும்பும் ஒருவர் அந்த வர்க்கத்தின் பிரதிநிதியாக இருக்க வேண்டுமென்பதில்லையே. தான் சார்ந்த வர்க்கத்திலிருந்தே நேர்மையாக உழைக்கலாம். ஆகவே நடிக்கத் தேவையில்லை.

"அடிக்கடி சுயவிமர்சனங்கள் செய்து கொள்ளுவோம். திருந்துவம், முன்னோக்கி நகருவம்."

தன்னை மறந்து படபடவெனக் கதைத்துக் கொண்டிருந்தவன் மணிக்கட்டைத் திரும்பிப் பார்த்தான்.

நேரத்தைப் பார்த்துப் பதறவும் மெத்ரோ வரவும் சரியாக இருந்தது.

"ஓ.கே. யசோ, சந்திப்பம்" கூறியவாறு "மெத்ரோ"வில் ஏறிக் கொண்டான்.

பலவித சிந்தனைகள் என்னுள் அலைமோத நானும் "றூம்" நோக்கி நடக்கத் தொடங்கினேன்.

வைகுந்தன்,

மீண்டும் ஒருவேளை சந்தித்துக் கொண்டால்....



## வசந்தன் மணிக்கதை –6

### முட்டாள்

ஒரு வியாபாரி அவசரமாக நடந்து சென்றான். முடக்குத் திரும்புகையில் அவன் பாதத்தில் கல்லு ஒன்று குத்தி இரத்தம் சிந்தியது.

"ஆ, நாசமாப்போன கல்லு, காலில் அடித்துக் காயப்படுத்தி விட்டதே" என்று திட்டிக் கொண்டே ஆத்திரத்தில் அதைத் தூக்கி எறிந்தான்.

"முட்டாளே, நீதானே வந்து சும்மா கிடந்த என்மீது விழுந்தாய். கண் உள்ள நீ பார்த்துப் போகக் கூடாதா: இது யார் குற்றம்?" என்று கேட்டது கல்லு.

வாய் மூடிய வியாபாரி வெட்கத்தோடு நடந்தான்.

www.tamilarangam.net

# எப்பொருள் யார்வாய்க்கேட்பினும்

## குட்டிக்கதை

**- ஜனிக்ராஜ்**

ஒரு நாட்டில் ஓர் அரசன் இருந்தான். அவன் குடி மக்களின் துன்ப துயரங்களை அறிந்து அவற்றிற்குப் பரிகாரம் செய்து வந்தான்.

இதனால் அவ்வரசன் மக்களால் போற்றிப் புகழப்பட்டான். அரசனின் புகழ் நாடெங்கும் பரவியது. மக்கள் அரசனைப் புகழ் வதைக் கண்ட பிரதம மந்திரி, பொறாமை கொண்டு அரசனை ஒழித்துக் கட்டி, பதவியைக் கைப்பற்ற முடிவு செய்தான்.

சமயம் பார்த்திருந்த மந்திரி அரசனின் அந்தப்புரம் சென்று, "அரசே, கொடிய விலங்குகள் நாட்டுக்குள் நுழைந்து, ஏழை விவசாயிகளின் பயிர்களை நாசம் செய்கின்றன. இதனால் மக்கள் பசி பட்டினி தாங்காமல் மடிகின்றனர். விலங்குகளை வேட்டையாடுவதில் வல்லவரான தாங்கள் பாராமுகமாய் இருப்பதாக மக்கள் பேசிக் கொள்வதோடு தங்கள் மீது வெஞ்சினங் கொண்டிருக்கின்றார்கள்" என்று வினயமாக உரைத்தான்.

இதைக் கேட்ட அரசன் மனம் கலங்கியது.

"அப்படியா சேதி? மந்திரியாரே, இன்றே நான் வேட்டைக்குச் செல்ல வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை உடனே செய்யுங்கள்" என்று கட்டளை இட்டான்.

மந்திரி சகல தயாரிப்புக்களையும் செய்து கொடுத்து அரசனை வழியனுப்பி வைத்தான்.

அரசியில் மோகங் கொண்டிருந்த மந்திரி, 'இதுதான் தக்க தருணம்' என்று நினைத்து அன்றிரவு அந்தரங்க மாளிகைக்குச் சென்றான்.

அரசியோ வெஞ்சினங் கொண்டு மந்திரியை விரட்டி விட்டாள்.

மந்திரி அவமானம் தாங்காமல் பழி தீர்க்கும் நோக்குடன் வெளியேறினான்.

மறுநாள் அதிகாலை அரசன் வேட்டையாடுவதற்காக அமைத்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முகாமுக்கு அரண்மனைச் சேவகன் ஒரு கடிதத்துடன் ஓடி வந்தான்.

"அரசே, மந்திரி பிரதானியார் தங்களிடம் இக்கடிதத்தைக் கொடுத்துவிடும்படி கூறினார்" என்று அரசனிடம் அக்கடிதத்தைக் கொடுத்தான்.

"அரசே, தாங்கள் இல்லாத சமயம் பார்த்து, தங்கள் தேவியார் அந்தரங்கப் பாதுகாவலனுடன் சல்லாபம் புரிவதைக் கண்டு திகைத்தேன். எனக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. கடிதம் கண்டதும் உடனே புறப்பட்டு வாருங்கள்...."

இந்த வாசகங்களை வாசிக்கும் போதே அரசனுக்குக் கோபம் தலைக்கேறி விட்டது.

உடனே ஒரு கடிதம் எழுதி, வந்த சேவகனிடமே கொடுத்து அனுப்பினான்.

"நான் அரண்மனைக்குத் திரும்பு முன்பே என் மனைவியின் தலையைக் கொய்து அரண்மனை வாசலில் தொங்க விடவேண்டும். இது தவறினால் உமது தலை துண்டிக்கப்படும்"

அரசனின் இந்தக் கடிதத்தைக் கண்ட மந்திரி அரசன் ஆணைப்படி அரசியின் தலையைக் கொய்து வாசலில் தூக்கி விட்டான்.

மறுநாள் அரசன் அரண்மனை திரும்பும் போது மந்திரியின் சூழ்ச்சி அம்பலமாகியது.

"ஐயோ, பதவி ஆசை பிடித்த மந்திரி சொற்கேட்டு மதி மயங்கி, பாதகன் நான் பத்தினியான என் அரசியைக் கொன்று விட்டேனே" என்று கதறி அழுதான் அரசன்.

மந்திரி சிரித்துக் கொண்டு வெளியே நின்ற அரசனைக் கைது செய்து சிறையில் தள்ளினான்.

"நல்லவனாக இருந்தாலென்ன. வல்லவனாகவும் இருக்க வேண்டும்" என்பதை அரசன் அன்றுதான் உணர்ந்தான்.

www.tamilarangam.net

# இலங்கை: கருத்தும் கண்ணோட்டமும்

பிரதீபன்

1977லிருந்து இலங்கையின் தலைவிதியை ஜே.ஆர் தலைமையில் சுவீகரித்துக்கொண்ட யூ.என்.பி அரசு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வழுங்கி நல்விணக்கம் காண்பதற்குப் பதிலாக, இதுவரை செய்து வந்த தகடுதத்தம், இலங்கையை யுத்த களமாக்கி வரலாறு காணாத விதத்தில் இரத்த வெள்ளத்தில் மூழ்க வைத்து விட்டது.

அரசின் வக்கற்ற போக்கால் இலங்கை, முதலாளித்துவ ஏகாதிபத்தியாளர்களுக்கு அடகு வைக்கப் பட்டுள்ளது. பக்கத்தேயுள்ள நேசநாடான இந்திய தேசத்தைப் பகைத்துக் கொண்டு மேற்கத்தைய - கீழைத்தேச முதலாளித்துவ நாடுகளின் உபதேசங்களை மையப்படுத்தி அதிகாரத்தை வலுப்படுத்தப் பார்க்கின்றது. தீவிர இயக்கங்களை நாடு பூராவும் வளர்த்து உசுப்பி விட்டு அதிகாரத்தைப் பலப்படுத்த ஜே.ஆர் கையாண்ட உத்தி முறைகள் தோற்றுப்போனதையும் பிரேமதாசா உணர்வதாக இல்லை. ஜே.ஆர் ஈற்றில் ஞானம் பெற்ற தன்மை கூட பிரேமதாசா அரசுக்கு இல்லை. தான் மட்டுமன்றி, தீவிர இயக்கங்களையும் முடுக்கிவிட்டு இந்திய எதிர்ப்பியக்கம் நடத்திய பிரேமதாசா ஈற்றில் இயக்கங்களுக்கே முகம் கொடுக்க வேண்டியதாயிற்று. பதினான்கு மாத இடைவெளிப் பேச்சு வார்தகை தத்தம் நிலைகளில் பலப்படுத்த பாவிக்கப் பட்டதேயன்றி, பிரச்சினைகளை யதார்த்த பூர்வமாக அணுகித் தீர்க்க முனையவில்லை.

அரசின் கையாலாகாத் தனத்தால் வேலையில்லாத் திண்டாட்டத்தில் சிக்கிய லட்சக்கணக்கான படித்த இளைஞர்கள் யுவதிகள் வெளிநாடுகளுக்குக் கூலிகளாக உள்ளூர் சுரண்டல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முகவர்களால் அனுப்பப் பட்டுள்ளனர், ஆயிரக்கணக்கான இளைஞர்கள் யுவதிகள் முகவர்களால் ஏமாற்றப்பட்டுத்தம் வாழ்க்கையையே முடித்துக் கொண்டனர். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இன்று ஏழு வட்சத்திற்கதிகமான மக்கள் பரிதவிக்கின்றனர். இவ்விதமாக வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்துக் கட்டி அரசு பெரும் சாதனை புரிந்திருக்கின்றது.

இனங்களுக்கிடையில் அரசு பகைமையூட்டிப் பகை வளர்க்கும் நிலையையும் தோற்றுவித்ததோடு, சுலபமாகத் தீர்க்கவேண்டிய பிரச்சினைகளையும் சிக்கலாக்கியுள்ளது. ஜே.ஆர். அரசில் லலித் அத்துலத் முதலி போல பிரேமதாச அரசில் ரஞ்சன் விஜயரட்னா இயக்கங்களை வேகப்படுத்தும் விதத்தில் "ஏட்டிக்குப் போட்டி"யான அரசியல் நடத்துகிறாரேயன்றி, பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிகளை மருந்துக்கும் சொல்வதாக இல்லை. வட - கீழ் மாகாண இளைஞர்கள் ஆயுதம் ஏந்தத் தள்ளப் பட்டார்களே யன்றி, *அரசியலை* வழி மார்க்கமாகக் கொள்ளவில்லை. ஆனால், அரசு ஆயுதம் தாங்கிய இயக்கங்களைக் கட்டுப்படுத்தும் போர்வையில் ஒரு தமிழ்த் தேசிய இனத்தையே அழிக்கும் வகையில் முழு ராணுவத் தர்பார் நடத்துகின்றது. "ஆயுத அணுகு*முறை* பிரச்சினைகளைத் தீர்க்காது" என்று அரசும் சொல்லிக் கொண்டே வட - கீழ் மாகாணங்களை ஆயுதப் பாசறையாக்கியுள்ளது. வட மாகாண மக்களை இப்போ பட்டினி போட்டு வதைக்கின்றது.

யூ.என்.பி, அரசு கட்டில் ஏறி ஜே.ஆர். தலைமை மாறி பிரேமதாச தலைமை ஏற்றுப்பதினான்கு ஆண்டுகளாகியும் எந்தப் பிரச்சினைகளையும் தீர்க்க முடியாமல் திணறுகின்றது. தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதாகச் சொல்லிக் கொண்டே வழக்கம்போல் ஏமாற்றி வருகின்றது.சுயநிர்ணய உரிமையை வழங்குவதில் யூ.என்.பியும் பிற்போக்கு இனவாதிகளுமே குறுக்கே நின்றன. மார்க்ஸிய இடதுசாரிகள் ஒருபோதும் குறுக்கே நிற்கவில்லை. இடதுசாரிகளே தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வழங்கவேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். பண்டா - செல்வா ஒப்பந்தத்தை ஏற்படுத்தி அதற்கான ஆதரவும் வழங்கியவர்கள் இடதுசாரிகளே. ஜே.ஆர். தலைமையில் எதிர்த்துக் கண்டி யாத்திரை செய்த யூ.என்.பி இன்றுவரை அந்த நிலைப்பாட்டுடனேயே செயற்பட்டு வருகின்றது.

தமிழ் மக்கள் தங்கள் அடிப்படை உரிமைக்காகப் போராடு

www.tamilarangam.net

கின்றனரேயன்றி, ராணுவத்தோடு மோதிக் கொண்டிருக்கவல்ல என்பதை வட - கீழ் மாகாண மக்கள் எப்போதும் உணர்த்தியே வந்துள்ளனர். ஆனால் யூ.என்.பி. அரசோ அடிப்படைப் பிரச்சினைகளையே விட்டு விட்டு, தன் அதிகாரத்தைப் பலப்படுத்து வதற்காகத் தீவிர இயக்கங்களைக் குறி வைப்பது போல் காட்டி இன்று ஓர் இனத்திற்கெதிராகவே இராணுவத்தை ஏவிவிட்டிருக் கின்றது. தரை, விமான, கடல் மார்க்கமாகக் குண்டுகள் பொழிந்து வட-கிழ் பிரதேசத்தை எரிகாடாக்குகிறது.

'மக்களிடமிருந்து தீவிர இளைஞர் இயக்கங்களைத் தனிமைப் படுத்திச் செயலிழக்கச் செய்ய வேண்டும்' என்று இலங்கையில் இப்போது ஒரு புதிய அரசியற் காற்று வீசுகிறது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையோடு வட - கீழ் மாகாண இணைப்பில் சுயாட்சி நிர்வாகம் அமைத்தாலன்றி எதுவுமே சாத்தியப்படப் போவதில்லை என்பதை உள்வாங்கின் இந்தப் புதிய அரசியற் காற்றுக்கு அர்த்தமுண்டு. அதனை விடுத்து இயக்கங்களை மக்களிடமிருந்து தனிமைப்படுத்துவது என்பது நடைமுறைச்சாத்தி யப்படாத ஒன்றாகும்.

ரணகாயங்களை இன்னோர் ரணகாயத்தாலன்றி "அரசியற் தீர்வு" என்னும் "ரணசிகிச்சை"யால் மட்டுமே குணப்படுத்தலாம். எத்தரப்பினரும் "ஏட்டிக்குப்போட்டி" என்ற செயற்பாடுகளைக் கைவிட்டு நாட்டில் சமாதானம், ஐக்கியம், மக்கள் நலன் கருதி, சகல முற்போக்குச் சக்திகளும், இளைஞர் இயக்கங்களும் உணர்ந்து செயற்படவேண்டியதே இன்றைய அவசரத் தேவை.

இலங்கை அரசு இயக்கங்களைச் சீண்டிவிட்டுத் தனது அதிகாரத்தைப் பலப்படுத்துவதிலேயே கவனம் செலுத்துகின்றது. வீடு கொளுத்துகின்ற ராசாவுக்கு நெருப்புக்கொடுக்கின்ற மந்திரி போல் இரு கன்னையும் செயற்படுவதால் பொதுமக்களே முழு அழிவுக்கும் முகம் கொடுக்க வேண்டிய அவலநிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

உலகில் எதற்கும் பெறுமதியுண்டு. அனால், மனித உயிர்களின் பெறுமதியை எவராலும் அளவிட முடியாது. எந்த ஒரு மனித உயிரையும் யாரும் அழிக்க உரிமையில்லை. முரண்பாடுகளைக் கருத்தால் வெல்லலாம்; அழிக்கலாம். இதுவே ஜனநாயக வழி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் மக்களுக்கு இருபக்க இடி. இந்நாட்டின் விலை மதிக்க முடியாத கண்மணிகள் புத்திஜீவிகள் எத்தனையோ ஆக்கசாதனங்களை நாட்டிற்கு அளிக்கக்கூடிய இன்னுயிர்கள் அழிக்கப்பட்டன. அழிக்கப்படுகின்றன. நாடே இல்லாத சுடுகாடாகவும், இடுகாடாகவும் வட கீழ்மாகாணங்கள் இன்று முறிந்த பனைமரங்கள் போலாகின்றன. இந்த நிலை இனியும் வேண்டாம்.



மகாகவி பாரதியின் நினைவாக.....

பாரதியின் சங்கற்பங்கள் சில:

¥. பொழுது வீணே கழிய இடங்கொடேன்.
¥. மறந்தும் தற்புகழ்ச்சி பாராட்டுதல் விரும்பேன்.
¥. மூடரின் உள்ளத்தில் என்னைப்பற்றிய பொய்மதிப்புண்டாக இடங்கொடேன்.
¥. பொய்மை, இரட்டுற மொழிதல், நயவஞ்சனை,நடிப்பு இவற்றால் பொருளீட்டிப் பிழைத்தல் நாய்ப் பிழைப்பென்று கொள்வேன்.
¥. இடையறாது தொழில் புரிந்து இவ்வுலகப் பெருமைகள் பெற முயல்வேன்.

பின் அட்டையில்: மகாகவி சுப்பிரமண்ய பாரதியார்.

நன்றி: தாமரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நான் வருவேன்

நீ விரும்பினால் என்னைச்
சூழ சுவரெழுப்பிச் சிறைக்கூண்டிற் தள்ளலாம்
யாருமே காணாமற் திரையிட்டு மூடலாம்
வானும் தெரியாமல் நெடுங்கூரை வேயலாம்
ஆனாலும் நான் வருவேன்.

நீ விரும்பினால் எனது
கண்ணிரண்டைக் கட்டலாம்
குத்திப் பிடுங்கிக் குருடாகச் செய்யலாம்
வாய்க்குட் துணியடைத்துக் குரலை மறித்திடலாம்
ஐயம் இருந்தால் நாவைத் தறித்திடலாம்
எழுத முடியாமற் கைவிலங்கு பூட்டலாம்
எழுதுவது வலதெனினும் இடதையும் வெட்டலாம்
ஆனாலும் நான் காண்பேன்
எல்லோருங் காண எழுதுவேன் பேசுவேன்.

நீ விரும்பினால் என்னைத்
துவக்காற் சுடலாம் தூக்கு மரமேற்றலாம்
நஞ்சு பருக்கலாம் நசுக்கி அரைத்திடலாம்
கத்தியாற் வெட்டலாம் கனல் நெருப்பில் போடலாம்
ஆனாலும் நான் வருவேன்.

நீ விரும்பின் என்னுடலை
ஆழப் புதைக்கலாம் அலைகடலிற் போடலாம்
அரைத்து விலங்குகட்கு ஆகாரமாக்கலாம்
நீறாக்கி வான நெடுந்தொலைவில் வீசலாம்
ஆனாலும் நான் வருவேன்
கம்பிக் கதவுடைத்து கற்சுவரின் மேற்தாவி
கண்முளைத்து நாவளர்ந்து கைமுளைத்துக் கட்டவிழ்த்து

www.tamilarangam.net

ஆழுக்கிடங்கினின்று அலைகடலின் கீழிருந்து
விலங்கின் குடல் கிழித்து வானவெளி கடந்து
சுட்டெரித்த சாம்பலின் ஃபீனிக்ஸ் பறவையென
வெட்டுண்டு கீழ் வழிந்த குருதித் துளியுயிர்த்து
சஞ்சீவி மாமலையின் காற்றுறிஞ்சி நான் வருவேன்
அறைகின்ற சிலுவைகளில் மரித்து உயிர்த்தெழுவேன்
வான எந்து நான் வருவேன் தூண்பிளந்து நான் வருவேன்
நீ நம்ப மறுக்கின்ற கதையெல்லாம் நிசமாக்க
விடுதலையும் சமத்துவமும் முழங்குமொவ்வோர் மூச்சினிலும்
அடிமைத்தனத்துடனே அடக்குமுறை உள்ளவரை
மறுபடியும் மறுபடியும் மறுபடியும் நான் வருவேன்
நீ விரும்பாவிட்டாலும் நிச்சயமாய் நான் வருவேன்.

**லண்டன்** **சிவா**

# இலக்கியச்செய்தி

பிரெஞ்சு மக்கள் மத்தியில் வெளிவராத இலக்கியங்களை அறிமுகப்படுத்துமுகமாக, பிரெஞ்சு அரசால் "Fureur De Lire" (அதி தீவிர வாசனை) என்று சில தினங்கள் ஒதுக்கப் படுகின்றன.

பல்வேறு நல்ல நூல்களிலிருந்து மிக முக்கிய பகுதிகளைத் தெரிவு செய்து, ஒரு நூல் நிலையத்திற்கு முன்பாகவோ அல்லது மக்கள் கூடும் முக்கிய இடங்களிலோ ஒருவர் அதனை உரத்துப் படித்துக் காட்டுவார். கூடி நிற்போர் அமைதியாகச் செவி மடுப்பர். இப்படிப் பற்பல நூல்களிலிருந்தும் இவ்வாசனை தொடரும். இவற்றால் கவரப்படும் மக்கள் தமக்குப் பிடித்த நூல்களை விலை கொடுத்து வாங்கிச் செல்வர்.

ஒக்டோபர் 13, 14ந் திகதிகளில் பிரான்ஸ் பூராவும் இம்முறை பின்பற்றப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# நட்பு

— கௌதமன்

"சிவா வேலைக்குப் போக வில்லையா?"

படுத்திருந்தவாறே சுதர்சன் குரல் கொடுத்தான்.

துடிதுடித்துக் கொண்டு அவசர அவசரமாக எழுந்து ரவுசர், சேர்ட், சப்பாத்து மாட்டிக் கொண்டு "ரீ" போட நினைத்தவன் மணிக் கூட்டை ஒரு முறை பார்த்துக் கொண்டான்.

"ஓ லலா..."

எடுத்த பாத்திரத்தைக் கீழே வைத்துவிட்டு வேகமாகப் படியிறங்கினான்.

அந்த அவசரத்திலும் அவனையறியாமலே கை "லெட்டர் பொக்ஸ்"னுள் திறப்பை விட்டுத் துளாவியது.

வழமைபோல் அன்றும் வெறுமையாகவே இருந்தது.

"இப்ப பத்தே கால்தானே. இனித்தானே "போஸ்ட்மன்" வருவான்"

தன்னைத்தானே தேற்றிக் கொண்டு "மெத்ரோ"வை நோக்கி ஓட்டமும் நடையுமானான் சிவா.

"றெஸ்ரோறன்ற்" வாசலை நோட்டமிட்டுப் பார்த்தான்.

"பத்துறோன்" இல்லை.

'அப்பாடா'

ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டு உள்ளே சென்றான்.

"செவ்" மணிக்கூட்டையும் அவனையும் ஒரு அர்த்தத்தோடு பார்த்தான். பார்வை சரியில்லை.

சிவா பொருட்படுத்தவில்லை.

"பொன்ஸூ மிஸ்சு"

காலை வணக்கத்தைத் தெரிவித்துவிட்டு "செவ்"ன் பதிலுக்குக் கூடக் காத்திராமல் வழமையான தனது வேலைகளைத் தொடங்கினான்.

பிரான்சுக்கு வந்த காலம் தொடக்கம் சிவா வாழ்க்கையில் விரக்தியடைந்தவனாகவே காணப்பட்டான்.

ஆரம்பத்தில் புதிய சூழல் புதியதொரு தெம்பைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கொடுத்திருந்த போதும் நாட்கள் நகர நகர வாழ்க்கை சலிப்புத் தட்டியது.

ஆரம்பத்திலிருந்த விசா, இருப்பிடப் பிரச்சினைகள் சகலதும் சரிவர வாழ்க்கை மேலும் அர்த்தமற்றதாகிக் கொண்டிருப்பதை உணர்ந்தான்.

இருந்தும் குடும்பநிலை; பொருளாதாரப் பிரச்சினை காரண மாக முப்பது வயதாகியும் கல்யாணமே ஆகாமல் காத்திருக்கும் அக்கா, "ஷெல்" விழுந்து அண்ணன் இறந்து போனதால் அனாதை யாகி நிற்கும் அண்ணனின் குடும்பம், பாசத்தைப் பிளிந்துருக்கும் தாயின் நோய்க் கோலம், தள்ளாத வயதிலும் உடல் வருத்தி உழைத்துக் கொண்டிருக்கும் தந்தை.

எல்லாவற்றையும் அலசிப்பார்த்தபோது தனது அர்த்தமற்ற வாழ்க்கையிலும் ஒரு அர்த்தம் இருப்பதாக எண்ணிக் கொள்வான்.

ஆனாலும், இடையிடையே அவன் வாசித்துக் கொண்டிருந்த சித்தாந்தப் புத்தகங்களினால் குழம்பினான்.

'நான், என்னைப் போன்ற எத்தனையோ இளைஞர்களின் அர்த்தமில்லாத வாழ்க்கை, நாட்டில் தொடர்ந்து கொண்டிருக்கும் அர்த்தமில்லாத அனர்த்தங்கள், நாற்றமெடுக்கும் சமூகச் சீர்கேடு கள் இவற்றிற்கெல்லாம் என்னதான் முடிவு?

ஒடுக்குமுறைகளின் உச்சத்தில்தான் புரட்சி வெடிக்கும் சமூகம் மாற்றமடையும். விடிவு கிடைக்குமென்றால் நான், எனது குடும்பம் அவர்களின் கஸ்டதுன்பங்கள் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கின்றேனே! நாளை வளர்ந்து வரும் அண்ணனின் பிள்ளைகள் கூட புரட்சியின் பங்காளர்களாகி விடாமல் எனது செயல்கள் தடுக்கின்றனவா?'

குழம்புவதும் தெளிவதும், குழம்புவதும் தெளிவதும் அவனது இயல்பாயின.

கடைசியில் குடும்பபாசம் கட்டிப் போட வழமைபோல் இயந்திர வாழ்க்கையைத் தொடங்குவான்.

அண்மைக்காலமாக அவனது மனநிலை மோசமாகப் பாதிக் கப்பட்டிருந்தது. நாட்டில் நடந்து கொண்டிருந்த சம்பவங்கள் அவனை உசுப்பின. தினம் தினம் வந்து கொண்டிருந்த செய்திகள் அவனை நடைப் பிணமாக்கின.

"அறுபதினாயிரம் பேர் அகதிகளாம்"

"அகதி முகாம்களில் குழந்தைப் பிள்ளையள் பால்மாவும் இல்லாமல் கஷ்டப்படுகிதுகளாம்"

அண்ணனின் குழந்தைகளை நினைத்துக் கொண்டான்.

www.tamilarangam.net

'அகதி முகாமில் அம்மாவும் இருப்பாளோ?'

'அப்பா!'

அவனால் கற்பனை பண்ணவே முடியவில்லை.

குனிந்து நின்று பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்தவன், அந்தத் தண்ணீருடன் அவனுடைய கண்ணீரும் சங்கமமாயிற்று.

"செவ்" அவனுக்கருகில் சென்று முதுகில் தடவித் தேற்றிவிட்டு மீண்டும் தன் வேலையில் கவனமானான்.

சிவாவை நன்கு புரிந்து கொண்டவன் "செவ்". தினமும் சிவாவுக்கு ஆறுதல் சொல்ல மட்டுமே அவனால் முடிந்தது.

'ஊரோட சேர்ந்ததுதானே! என்னுடைய குடும்பத்திற்கு மட்டும் தனியாகப் பிரச்சினையில்லையே!'

சிவா மெதுவாகத் தேறிக் கொண்டான்.

இலங்கையில் சஞ்சரித்துக் கொண்டிருந்தவன் பாரீஸ் - தன் "றூம்"ற்கு வந்தான்.

"றூம் மேற்"நண்பன்- சதர்சனை நினைத்தபோது அவனுக்கு வருத்தமாக இருந்தது.

'சீ.... என்ன இருந்தாலும் ராத்திரி, நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாது. ஒவ்வொருத்தரும் பிழையள் விடுறது இயற்கைதானே. பக்குவப்படாத ஒருத்தனிடத்தில் ஆற்றாமை, இயலாமை ஏற்படுகிறபோது பொறாமை, மூண்டாந்தரக் குணம் ஏற்படுறது இயல்புதானே!'

'இதுக்குப்போய்........'

'தலையிடிக்குதெண்டு வேலைக்குக் கூடப் போகாமல் நிக்கிறான் எட, "அஸ்பிறீனா"வது வாங்கிக் குடுத்திட்டு வந்திருக்ககலாம் அல்லது குடிநீராவது வைச்சுக் குடுத்திருக்கலாம். கடைசி கேட்டிட்டாவது வந்திருக்கலாம்'.

தன்னைத்தானே கடிந்து கொண்டான்.

'பின்னேரம் போன உடன வாங்கிக் குடுப்பம்'

பழையபடி சிவா வேலையில் நாட்டமானான். மத்தியான நேரம் 'கிளியன்ஸ்' கூடிய நேரம் "செவ்" பம்பரம் போலச் சுழன்று கொண்டிருந்தான். சிந்திப்பதற்குக் கூட நேரமில்லாமல் சிவாவும் இயந்திரமானான்.

ஒரு மாதிரி மூன்று மணியாகியது.

சிவா கழுவிய பீங்கான்கள், கிளாஸ்கள், சகலவற்றையும் ஒழுங்காக அடுக்கி வைத்துவிட்டு "றூம்"ற்குத் திரும்பினான்.

"மெத்ரோ"வால் இறங்கி நடக்கும்போது அவனது நடையில் ஒரு வேகம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'இண்டைக்குச் செவ்வாய்க்கிழமை கட்டாயம் வந்திருக்கும்'

செவ்வாய் வெள்ளிகளில்தான் அநேகமாக "சிலோன்" கடிதங்கள் வருவது வழக்கம்.

மூன்று மாதங்களுக்கு மேலாகக் கடிதங்களைக் காணாத சிவா தினமும் இதே போலத்தான்.

'இண்டைக்கெப்படியும் வந்திருக்கும்'

மூன்று மணிக்கு வேலை முடிந்து "றெஸ்ரோறன்"ரிலிருந்து "றூம்" திரும்பும் வரை அவனது சிந்தனை கடிதங்களின் மீதே இருக்கும்.

'என்ன எழுதியிருப்பார்கள்...?'

'அம்மா எழுதியிருப்பாவோ!'

'இல்லாட்டி அப்பா....'

'வழமைபோல அக்காதான் எழுதியிருக்கும்'

'ஏதாவது கூடாத செய்தியள்....!'

'சீ.....அப்படியொண்டும் இருக்காது'

பலவிதமான கற்பனைகளுடன் ஓட்டமும் நடையுமாக ஓடி ஓடி வருவான்.

ஆனால் ஓடிவந்து கடிதப் பெட்டிக்குள் கையைவிட்டால் ஏமாற்றம்தான் பதிலாகக் கிடைக்கும். சிலவேளைகளில் மட்டும் "பாங்க்" கடிதங்கள் அல்லது "அட்வடிஸ்மன்ற்" துண்டுகள் இருக்கும்.

எரிச்சலுடன் கிழித்துக் குப்பையில் போடுவான்.

இன்றும் வழமை போலத்தான்.

ஓடி வந்து திறந்து பார்த்தான்.

கடிதப்பெட்டி வெறுமையாகக் கிடந்தது.

அவன் கடிதப் பெட்டியைப் பார்த்த போது அது அவனைப் பார்த்துப் பரிதாபமாகச் சிரிப்பது போலிருந்தது. சலிப்புடனும் சோர்வுடனும் படியேறினான்.

வந்த களைப்பு நீங்க, குடிப்பதற்காக தேனீர் போட்டுவிட்டு தேயிலைச் சரையைப் "பூபலுக்குள்"(குப்பைவாளி) போட்டான். உள்ளே சிலோன் "ஏறோகிறாம்" கடிதம் ஒன்று துண்டு துண்டாகக் கிடந்தது.

'சுதர்சனுக்கு வந்திருக்கும்'

'இவன் ஏன் கிழித்துப் போட்டிருக்கிறான்?'

'ஏதாவது கூடாத செய்தியா இருக்குமோ!'

மனம் பதைபதைக்க சுதர்சனைத் தேடினான்.

சுதர்சன் இல்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திரும்பவும் வந்து "பூபலை" உற்றுப் பார்த்தான்.

'இல்லை.....இது அம்மாவின் எழுத்து'

ஒரிரு துண்டுகளை எடுத்துப் பொருத்திப் பார்த்தான்.

"எனதருமை மகனுக்கு" என்றிருந்தது.

'அம்மாதான் என்னுடைய அம்மாதான்'

மேலும் சில துண்டுகளை எடுத்துப் பொருத்திப் பார்த்தான்.

"உன்னை நினைத்து நினைத்து ஏங்"

'பழைய கடிதமாக இருக்குமோ?'

நெஞ்சில் ஒருவித ஏக்கம்

கடிதத் தேதியைத் தேடினான்.

'ஆம். அண்மையில் போடப்பட்டிருந்த கடிதம்தான்' கடிதத் திகதியை உற்றுப் பார்க்கத் தெளிவாகியது.

அவனுக்கு உலகமே சுற்றுவது போலிருந்தது.

சுதர்சன்....!

சுதர்சனின் மூன்றாந்தரக் குணங்கள் பற்றி அவன் அறிவான். ஆனால் இவ்வளவுக்கு வக்கிரமாக....

கட்டிலில் விழுந்து தலையணையில் முகம் புதைத்து விக்கி விக்கி அழுது கொண்டிருந்தான் சிவா.

சுவரிலிருந்த மணிக்கூடு ஒரு முறை ஒலி எழுப்பி நின்றது. அவன் மீண்டும் "றெஸ்ரோறன்ற்" போவதற்கு இன்னும் அரைமணி நேரம் மட்டுமே உள்ளதென்பதை நினைவு படுத்தியபடி.

விணை

"நாங்கள் நச்சுத்தன்மையுடையவர்களா? என்று தன் தாயிடம் கேட்டது குட்டிப் பாம்பு

"ஆம், அன்பே" என்று பதிலளித்த தாய், "என் அன்பே, எதற்காக இக்கேள்வியைக் கேட்டீர்?"என்று வின்வியது.

"தவறுதலாக என் நாக்கை நானே கடித்து விட்டேன். அதுதான் பயமாக இருக்கின்றது." என்றது குட்டிப்பாம்பு.

தமிழில்; ஜனிக்ராஜ்.

Michael Kilgarriff
(1000 More Jokes for Kids)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சென்ற இதழ் தொடர்ச்சி.....

# யார் இந்த யாழ்ப்பாணத்தான்?

**********************************************

—கா. சிவத்தம்பி

யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் தமிழர்களும் ஒரு சில முஸ்லீம்களும் வாழ்கின்றனர். இவர்களுள் முஸ்லீம்கள் உண்மையான "யாழ்ப்பாணத் தமிழராக" யாழ்ப்பாணத்தாரால் ஏற்றுக் கொள்ளப் படுவதில்லை. எனவே நாம் தமிழர்களைத்தான் எடுத்துக் கொள்ளல் வேண்டும். இந்த நிலையிலாவது ஒருமை உணர்வும் கூட்டுணர்வும் நிலவுகின்றதா என்பதைப் பார்த்தல் வேண்டும். இக்கட்டத்தில்தான் யாழ்ப்பாணத்தின் அகமுரண்பாடுகள் தென்படத் தொடங்குகின்றன. அதாவது சமயமும் சாதியும் இவ்விடத்திற்கான முக்கிய பிரிவினைச் சக்திகளாக முகிழ்த்து நிற்கின்றன.

யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் கிறிஸ்தவர்களை "வேதக்காரர்" என்றும், சைவர்களைத் "தமிழர்கள்" என்றும்குறிப்பிடும் மரபொன்றுண்டு. யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு பாகத்திலும் கிறித்தவர்கள் உள்ளனரெனினும், கிறித்தவர்கள் பெரும்பாலும் யாழ்ப்பாணக் கலாச்சார வாழ்வினின்றும் ஒதுக்கப்பட்டவர்களாகவே உள்ளனர். யாழ்ப்பாணத்துப் பெரும்பான்மை மக்கள் சைவ மதத்தவராதலால், மதம் மாற்றப்பட்டவர்களான கிறித்தவர்கள் சைவர்களினின்றும் ஒதுங்கி வாழுமாறு கிறித்தவ போதகர்களால் ஊக்கப்படுத்தப் பட்டு வந்தமை வரலாற்று உண்மையாகும். கிறித்தவர்களையும், றோமன் கத்தோலிக்க வேதத்தினர் எனவும், புரோட்டஸ்தாந்து வேதத்தினர் எனவும் வகுக்கலாம். இவர்களுள் பண்பாட்டொதுக்கம் கத்தோலிக்க வேதத்தினரிடையிலேயே பெரும்பாலும் காணப்படுகிறது. உயர் சாதியினருள்ளும் கத்தோலிக்கர் பலருள்ளனரெனினும் உயர் சாதியினரல்லாதவர்களும் தாழ்த்தப்பட்ட சாதியினருமே பெரும்பான்மையினர். மேற் குறிப்பிட்ட பண்பாட்டொதுக்கத்துக்கு இதுவும் ஒரு காரணமாகும். ஆயினும் அவர்களது மதஉணர்வே இவ்வொதுக்க நிலைக்கு முக்கிய காரணமாகும். யாழ்ப்பாணத்தில் மிக அண்மைக்காலம் வரை இம்மத ஒதுக்கீட்டுணர்வு அடிதடி சண்டை நிலையை எய்தி நின்றதென்பதும் வரலாற்றுண்மை. புரொட்டஸ்தாந்தப் பிரிவுகளுள் வருபவர்கள் பெரும்பான்மையும் உயர்சாதியினராகக் காணப்படுவது கண்கூடு. ஒல்லாந்த, ஆங்கில ஆட்சிக் காலங்களில் மதம் மாற்றப்பட்டவர்களாதலால் இவர்

www.tamilarangam.net

கள் பெரும்பாலும் உத்தியோகத்தினராகவே உள்ளனர். கம வாழ்க்கையை தனிப் பொருளாதார முயற்சியாக மேற்கொண்டுள்ள புரொட்டஸ்தாந்தினர் மிக மிகச் சிலரே. உண்மையில் அத்தகையோர் இல்லையென்றே கூறலாம். இவர்களே யாழ்ப்பாண வாழ்க்கையில் "மேனாட்டு நெறி மாற்ற முகவர்"களாக (Agents of Westernisation) விளங்கி வந்துள்ளனரென்று கூறலாம். இதன் காரணமாக இவர்கள் தேசிய வாழ்வுடன் இணையாதவர்களென்ற குற்றச்சாட்டு ஓரளவு நிலவி வருகின்றது. புரொட்டஸ்தாந்துக் கிறித்தவர்களும், றோமன் கத்தோலிக்கர்களும் தமது மதங்காரணமாக (இம் மதத்தினர் உத்தியோக இடங்களிலும் காணப்பட்டதால்) யாழ்ப்பாணத்துக்கு வெளியே, சிறப்பாகக் கொழும்பில் பிற மக்களுடன், அதாவது தம் மதங்களைச் சார்ந்த பிற இனத்தினருடன் இணைந்து வாழக்கூடியதாக இருந்தது. இதன் காரணமாக யாழ்ப்பாணத்துக் கிறித்தவர்கள் தாம் யாழ்ப்பாணத்துச் சைவ மக்களிலும் பார்க்க விரிந்த மனப்பான்மை உடையவர்கள் என்று கருதிக் கொள்வதுண்டு. உத்தியோகங் காரணமாக யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்தின் தொடர்பற்றுப் போனவர்களின் தொகையை எடுத்தாராய்ந்தால் அத்தகையோருள் கிறித்தவர்களே அதிகமானோர் என்பது தெரிய வரும். இத்தகைய பண்பியற் காரணங்களால் யாழ்ப்பாணத்தாருள்ளும் கிறித்தவர்கள் ஒதுங்கியும் ஒதுக்கப்பட்டுமே நிற்கின்றனர்.

மீதியாக உள்ளவர்கள் சைவ மக்களே. சைவ மக்கள் என்ற நிலையில் வைத்துப் பார்க்கும்பொழுது சாதி பேதம் முக்கிய இடம் வகிப்பதைப் பார்க்கிறோம் ....சைமன்காசிச் செட்டி என்பவர் 1834ல் தாம் வெளியிட்ட The castes, customs, Manners and Literature of the Tamils (தமிழரின் சாதி, சம்பிரதாயங்கள், இலக்கியம்) எனும் நூலில் ஏறத்தாழ 65க்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழ்ச் சாதிப் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார். இவற்றுள் பல சாதிகள் இன்றைய கணக்கீட்டில் இடம்பெற முடியாதவை என்பது உண்மையே. சமூக அதிகார நிலையினைப் பொறுத்த மட்டில் யாழ்ப்பாணத்துச் சாதிக்குழுக்களை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்:-

(அ) உயர் சாதியினர்

(ஆ) உயர் சாதியல்லாதார்

(இ) குடிமக்கள்

உயர் சாதியினருள் இன்று முக்கிய இடம்பெறுவோர் வெள்ளாளரே. ஒல்லாந்தர் காலத்தில் வெள்ளாளர் உயர்சாதியினராகக் கருதப்பட்டு வந்தனர். மிக உயர் சாதியினரெனினும் யாழ்ப்பா

www.tamilarangam.net

பாணத்து வாழ்க்கையில் அதிகார மேன்மை உடையவர்கள் வெள்ளாளரே.

X, X, X, X, X, X, X, முதலியோர் (இப்பட்டியல் பூரணமானதன்று) உயர்சாதியல்லாதோர் எனக் கருதப்படுகின்றனர். பொதுப்படையாகக் கூறுனால், விவசாய வாழ்க்கையை மேற்கொள்ளாதவர்கள் இப்பிரிவினுட் கொண்டுவரப் பட்டனர் என்று கூறலாம்.

X மீனவர் குடியினர் வெள்ளாளர்களால் தமக்குச் சமமானவர்களாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லையெனினும், இவர்கள் சம அந்நஸ்து உடையவர்களாகவே வாழ்ந்து வந்துள்ளனர் என்பது தெரிய வருகின்றது.

மூன்றாவதாக உள்ள குடிமக்கள் குழுவினர் யாழ்ப்பாணத்துச் சாதியமைப்பின் சிறப்பம்சமாவர். X, X, X, X என்போர் குடி மக்களென ஒல்லாந்தரால் கணக்கிடப் பட்டனர். இவர்கள் வெள்ளாளரின் வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் அவர்களின் அடிநிலை மக்களாக நடாத்தப்பட்டு வந்தனர். குடி மக்கள் என்போர் வெள்ளாள மக்களுக்கு குடும்ப ஊழியம் செய்து வந்துள்ளார்கள்.

யாழ்ப்பாணத்துச் சாதியமைப்பின் பொதுப்படையான அதிகார வன்முறை இதுவே. எனினும் இடத்துக்கிடம் காலத்துக்குக் காலம் உயர்வு தாழ்வு நோக்க மாற்றமுற்றே வந்தது. இது உயர் சாதியினரல்லாதோர் எனப் பட்டவர்கள் சம்பந்தமாகவே பெரும்பாலும் தொழிற்பட்டு வந்தது. எந்த நிலையிலும் அதிகார மேன்மையும் உயர்வும் வெள்ளாளரிடத்தே இருந்து வந்தது.

பிராமணர்கள் யாழ்ப்பாணத்துச் சாதியமைப்பில் அதிகார மேன்மையுடையவர்களாக இருக்கவில்லை. தமிழ் நாட்டின் சமூக அமைப்புக்கும் யாழ்ப்பாணத்துச் சமூக அமைப்புக்கும் உள்ள முக்கிய வேறுபாடு இதுவாகும். தமிழ் நாட்டைப் போன்று, யாழ்ப்பாணத்திற் பிராமணர் நிலச் சொந்தக்காரர்களாக விளங்கவில்லை. யாழ்ப்பாணத்துப் பிராமணர் பெரும்பாலும் புரோகித வாழ்க்கையை மேற்கொண்டிருந்தமையே இதற்குக் காரணமாகும்.

சாதியமைப்பின் முக்கிய அமிசங்கள் சாதிக்குள்ளேயே திருமணஞ் செய்து கொள்ளல், குறைந்தோர் எனக் கருதப்படுவோருடன் சம ஆசனம், சமபோசனம் வைத்துக்கொள்ளாமை, அடிநிலைச் சாதியினர் எனக் கருதப்படுவோரைக் கோயில் முதலிய இடங்களுக்குள் புகவிடாமை என்பனவாகும். இவற்றுள் திருமணந் தவிர்ந்த மற்றையவை உண்மையில் அந்தஸ்துச் சின்னங்களாகவே தொழிற் பட்டன.

யாழ்ப்பாணத்துப் பொருளாதார சமூக வாழ்க்கையில் வெள்

www.tamilarangam.net

ளாள மேலான்மை யாழ்ப்பாண வரலாற்றின் ஆரம்ப காலந் தொட்டே காணப்படும் ஒரு பண்பாகும். யாழ்ப்பாணத்தில் எவ்வாறு குடியேற்றம் நடந்தது என்பதைக் கட்டுக்கதை உருவில் தெரிவிக்கும் இலக்கியச் சான்றுகளை (யாழ்ப்பாண வைபவமாலை போன்ற நூல்கள்) ஆராயும் பொழுது, யாழ்ப்பாணத்தில் முதன் முதலிற் குடியேறியவர்களுள் அதிகார நிலையிலிருந்தோர் விவசாய வாழ்க்கையை மேற்கொண்டிருந்தவர்களே என்பது தெரிய வரும். அந்நியராட்சிக் காலத்திலும் இவர்கள் அந்நியனைப்பேணி வந்தனர் என்பதும் அவ்வதிகார நிலையை விட்டுக் கொடுக்காது காலத்திற் கேற்றவாறு தமது கட்டுப்பாட்டதிகாரத்தைத் தம் கைகளினுள்ளேயே வைத்திருந்தனர் என்பதும் தெரிய வரும். போத்துக்கேயர் காலத்து ஒரு சிறிது மாறிற்றெனினும் இது பொதுப்படையான ஒர் உண்மையாகும்.

இவ்வரலாற்றுப் பண்பு காரணமாக, யாழ்ப்பாணத்து வரலாற்றைப் பின்னோக்காகப் பார்க்கும் சிலர் வெள்ளாளர் மேலாண்மைக் கோட்பாட்டினை (The Theory of Vella Domination) எடுத்துரைப்பர் போத்துக்கேய ஒல்லாந்த ஆட்சியாவணங்களை ஆராயும் பொழுது இவ்வுண்மை நன்கு புலனாகின்றது. ஒல்லாந்தர் கால யாழ்ப்பாண ஆட்சி முறையை நன்கு எடுத்துக்காட்டுவதாக அமையும் சுவார்டெக் குறூன் நினைவேட்டில் (Memoir Left by Hendrick Zwaarde croon 1967 Colombo, 1911) இப்பிரச்சினை பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில், வெள்ளாளர் மற்றைய சாதியினரை அடக்கி வந்தனர் என்றும், தாழ்ந்த சாதியினர் தமக்கெதிராக முறைப்பாடுகள், சமர்ப்பிக்க முடியாத வண்ணம் அடக்கி வைத்திருந்தனர் என்றும் அந்நிலையைத் தான் மாற்றியமைக்க முனைந்ததாகவும் கூறியுள்ளார். பன்னெடுங் காலமாக இருந்துவரும் வெள்ளாள மேன்மைக்கு இவர்கள் இடங் கொடுத்து வந்தனர் என்பது 1661 இல் எழுதப்பட்ட ஓர் அறிவுறுத்தக் குறிப்பிலிருந்து பெறப்படுகின்றது. ஒல்லாந்தர் காலத்தில் முக்கிய தமிழ்ப் பிரதானிகள் புரட்டேஸ்தாந்து மதத்தைத் தழுவியிருந்தனர் என்பது அவர்களது பெயர்களால் தெரியப்படுகின்றது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் இம்முறைமை தொடர்ந்து நிலவி வந்தது. ஒல்லாந்தர் காலத்தைப்போலவே, ஆங்கில ஆட்சியின் முற்கூற்றிலும், பெரும் பதவிகள் சாதியதிகார அடிப்படையிலேயே வழங்கப்பட்டன. ஆங்கிலேயர் ஆட்சியமைப்பை மாற்றி ஆங்கிலக் கல்வியைப் பதவி நுழைவுச் சீட்டாக்கிய பொழுதும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இந்நன்மையை அவர்களே பெற்றனர். கிறித்துவக் கல்லூரிகள் ஆங்கிலம் கற்பிப்பதால் தேசிய வாழ்வின் பண்பாட்டடிப்படை தகர்க்கப்படுகின்றதென்பதை உணர்ந்து செயற்பட்ட ஆறுமுக நாவலர் சாதிவாதியாக இருந்தாரென்பதை அவரது பல்வேறு கட்டுரைகள் நன்கு புலப்படுத்துகின்றன. நாவலரின் சாதிவாதத்தினால் உயர்சாதியரல்லாத சைவத் தமிழறிஞர் ஒருவர் நாவலரைக் கண்டிக்க நேர்ந்தமை இன்றைய இலக்கிய வரலாற்றேடுகளிற் காணப்படாத உண்மையாகும். தேசிய வாதம் கூட யாழ்ப்பாணத்தில் சாதியடிப்படையைப் பேணுவதற்கான ஓர் அம்சமாக மாற்றப்பட்டது. யாழ்ப்பாணத்துத் தாழ்த்தப்பட்ட சாதியினர் பலர் கிறித்தவத்தைத் தழுவியமைக்குக் காரணம் உயர்சாதி சைவர்கள் அவர்களை அடக்கி வைத்திருந்தமையே என்பது கிறித்தவ ஏடுகளிலிருந்து புலனாகின்றது. சைவ ஆங்கிலப் பாடசாலைகளிலே தாழ்த்தப்பட்ட சாதிப்பிள்ளைகளுக்குப் பலகாலமாக இடம் வழுங்கப்படாதிருந்தது. ஆரம்பப் பாடசாலைகள் கூட சாதியடிப்படையில் இயங்கி வந்ததென்பது பலரறிந்த உண்மை.

இவ்வாறு கல்வி வசதியினால் உத்தியோக வாய்ப்புக்கள் பெற்று யாழ்ப்பாணத்திலிருந்து, யாழ்ப்பாணத்தவர்கள் என்ற பூரண உணர்வுடன், வெளிப்பிரதேசங்கட்குச் சென்றவர்கள் பெரும்பாலும் உயர்சாதி மக்களே. கிறித்தவர்களும் அவ்வாறு வெளியே சென்றனரெனினும் அவர்கள் முன்னர் குறிப்பிட்டவாறு, ஒதுக்குநிலை வாழ்க்கையை மேற்கொண்டவர்களல்லர். ஏறத்தாழ 1945வரையில் பெரும்பான்மையும் இந்நிலைமை காணப்பட்டது. வெள்ளாளர் அல்லாதாரும் சிறு தொகையினர் சென்றதுண்மையே. ஆனால் அவர்கள் பிற இடங்களிற்றாமும் யாழ்ப்பாணத்து தாழ்த்தப்பட்ட சாதியினரல்லர் என்று நிறுவ வேண்டிய சமூகத்தேவை இருந்ததன் காரணமாக அவர்களும் பெரும்பான்மையினரின் வாழ்க்கை நெறியையே மேற்கொள்ள வேண்டியிருந்ததெனலாம்.

ஆனால் இவ்வெள்ளாள மேலாண்மையானது உண்மையில், யாழ்ப்பாணத்துப் பொருளாதார அமைப்பின் சமூக வெளிப்பாடே. எனவே இதனை வெறும் சாதிப் பிரச்சினையாகக் கொண்டு எரிந்த கட்சி எரியாத கட்சி பாடுவதால் பிரச்சினையின் அடியுண்மையை அறியாது போய் விடும் ஆபத்து ஏற்படும்.

யாழ்ப்பாணத்துச் சமூக அமைப்பு விவசாய மேன்மையடிப்படையில் நிறுவப்பட்டது. குடியேறிய நாள் முதல் அந்நியராட்சி வரை விவசாய நிலச் சொந்தக்காரர்களாக இருந்தவர்கள் வெள்ளாளரே. விவசாயப் பொருளா



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தார அடிப்படை காரணமாகவே குடிமக்கள் என்ற கோட்பாடு தோன்றிற்று. விவசாயத் தொழிலாளர்கள் குடிமக்களாயினர். நிலவுடமைச் சமுதாயமாகவே இது இயங்கி வந்தது. யாழ்ப்பாணத்து அரசின் தோற்றத்தை ஆராயும் பொழுது பிரதேச நிலவுடமையாளரிடையே மன்னன் சிறந்த நிலையை எய்தியிருந்தான் என்பது தெரிய வரும். நிலவுடமை ஆட்சிக்குள்ளே பன்முகப்படுத்தப் பட்ட அதிகாரநெறி (Decentralised Authority) காரணமாக நிலவுடமையாளரே அதிகாரிகளாகவுமிருந்தனர் யாழ்ப்பாணத்துப் புவியிலமைப்புக் காரணமாக பிற தொழில்களும் அங்கு (அந்தப் பூர்வீக உற்பத்தி சாதன நிலையில்) வளர முடியவில்லை. இதனால் விவசாய நிலவுடமையாளர் மிக முக்கிய இடத்தைப் பெற்றனர். யாழ்ப்பாணத்து நிலவுடமைச் சமுதாயத்தின் சிறப்பமிசங்களில் மேற்கூறியது முக்கியமானது. (யாழ்ப்பாணத்து நிலவுடமைச் சமுதாய அமைப்பின் சிறப்பமிசங்கள் பற்றி கணேசலிங்கனின் "சடங்கு" எனும் நாவலுக்கான முன்னுரையிலும் சில கூறப்பட்டுள்ளன) இந்தச் சூழ்நிலையில் இயல்பாகவே பொருளாதார அரசியல், சமூக மேன்மைகள் இயைந்து கிடந்தன.

ஆனால் இப்பொருளாதாரம் விவசாயப் பெருக்கத்துக்கான வாய்ப்புக்களைக் கொண்டதன்று. நிலத்தினமைப்பு நீர்வசதியின்மை, சாதனமின்மை, போதாமை முதலியன காரணமாக இது வளரக்கூடிய ஏன்றாக இருக்கவில்லை. ஆனால் அன்றைய நிலையில் மீன்பிடித்தலைத் தவிர்ந்த (மீன் பிடித்தலிலும் ஆழ்க்கடல் மீன் பிடித்தலுக்குத்தான் சிறிது சுயாதீனமிருந்தது. உள்ளூர் ஆறுகளில் மீன்பிடித்தோர் நிலமை மற்றையோரைப் போன்றேயிருந்தது.) மற்றைய தொழில்கள் யாவும் விவசாயத்தை நோக்கியதாகவே, அதை நம்பி வாழ்வனவாகவே இருந்தன. இதனால் விவசாய நிலவுடமையாளரின் சமூக கட்டுப்பாட்டதிகாரம் (Social control) பூரணமானதாக இருந்தது. அதாவது அவர்களே மேன்மையாளராக இருந்தனர். மேனிலையிருப்பவர்களிடம் மேலாண்மை செல்வது இயல்பே.

பின்னர் அந்நிய ஆட்சி நிறுவப்பட்ட பொழுதும் அடிப்படைப் பொருளாதார அமைப்பு மாற்றப்படாதிருந்தது.

ஆங்கில ஆட்சியின் கீழ் ஆங்கிலக்கல்வி, உள்ளதிலும் பார்க்க ஸ்திரமான ஒரு பொருளாதார பலத்தை, உத்தியோகங்களை அளித்தபொழுது அதனை மேல் நிலையிலிருந்தவர்களே பெற்றுக் கொண்டனர். தமிழ் நாட்டிலும் இதே நிலமைதான் ஏற் பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அங்கு பிராமணர்கள் பெற்றுக் கொண்டார்கள். பொருளாதார, சமூக அதிகாராத்துக்குப் பழக்கப் பட்ட வர்கள்., இப்புதிய பொருளாதார, சமூக பலத்தை மற்றவர்களுக்குச் சுவற விடாது தடுத்தமையும் இயல்பே. இச்சந்தர்ப்பத்தில், யாழ்ப்பாணத்து வெள்ளாளக் குடியினர் பலர் தாம் உத்தியோகம் பார்க்கத் தொடங்கி மேனிலையை வகிக்கத் தொடங்கிய பின்னர் தங்களது வறிய சுற்றத்தினர் அவ்வழியிற் சென்று மேனிலை எய்துவதைத் தடுத்தனர் என்னும் உண்மையையும் நாம் மறந்துவிடக் கூடாது. பெரிய உத்தியோகத்தர் பலர் தமது வறிய சுற்றத்தினரின் குழந்தைகளுக்கு ஆங்கிலக் கல்வி வசதியளிக்காததும், வசதியை மறுத்தும் வந்தனரென்பதும் யாழ்ப்பாணச் சமூகத்தை நன்கறிந்தோர் அறிவர். (தனிச் சிங்கள மொழி உபயோகம் வெள்ளாள மக்களின் மேவாண்மையைத் தகர்த்து அவர்களையும் மற்றச் சாதியினரைப் போல் சலுகையற்றவர்களாக்கி விடுமென்பதற்காகவே சிங்கள மொழிச் சட்டத்தைத் தமிழர் சிலர் எதிர்க்கின்றனர் என ல.ச.ச.க.யைச் சேர்நத திரு. காராள சிங்கத்தின் கருத்தை இச் சந்தர்ப்பத்தில் நினைவு கொள்ளல் நன்று).

இவ்வாறாக, உத்தியோகத் தனியுரிமை மேனிலையிலிருந்த மக்களிடமே சென்றமை வியப்புக்குரியவொன்றதல்ல.

வியாபாரத்தைப் பொறுத்த மட்டில், இத்தகைய கல்வி வசதிகள் பெருமளவிற் கிடையாத தீவுப் பகுதியினரே பெரும்பாலும் வெளிப்பிரதேசங்களில் கடைகள் நிறுவினர். இன்றும் இந்நிலமை ஓரளவு தொடர்ந்து நிலவுவதைக் காணலாம். காரைதீவு, புங்குடுதீவு முதலிய தீவுகளைச் சேர்ந்தவர்கள் இத்துறையில் முன்னோடிகளாக விளங்கினர்.

இத்தகைய விரிவற்ற சமுதாய அமைப்பிலுள்ளார் (Closedgroups) பிற இடங்களுக்குச் சென்ற பொழுது மற்றவர்களிடமிருந்து ஒதுங்கியும், தம்முள்தாம் நெருங்கி இணைந்தும் வாழ்ந்தமையும், தமது நலன்களைத் தொடரந்து பேண முனைந்தமையும் இயற்கையே. உத்தியோகமும், வியாபாரமும் குடும்ப மேனிலைக்காகவும் அம் மேனிலையைப் பேணுவதற்காகவும் மேற்கொள்ளப் பட்ட முயற்சிகளே. எனவேதான் அவர்கள் தாம் சென்ற பிற இடங்களிலும் அவ்வுணர்வுடன் வாழ்ந்து வந்தனர். யாழ்ப்பாணத்திலிருந்து பிற பிரதேசங்களுக்குச் சென்றவர் கள் அவ்வப் பிரதேச மக்களுடன் இணைந்து வாழாது சொந்தக் கிராமத்தையும், சொந்தக் குடும்பத்தையும் நோக்கியே வாழ்ந்து வந்ததும் இதனாலேயே.

கட்டுப்பாடுகள் நிறைந்த இக்

www.tamilarangam.net

கட்டுக் கோப்பிலிருந்து விடுபட்டு எப்படியோ கல்வி வசதி பெற்று மேனிலை எய்திய உயர் நிலை யற்ற சாதியினருடன் (அவ்வாறு பெறுவதற்கான வாய்ப்புக்கள் அர சாங்கத்தால் என்றுமே வழுங்கப் பட்டு வந்தன. அவற்றைப் பயன் படுத்த முடியாதிருந்தமையாற் றான் மற்றைய சாதியினர் கீழ் நிலையிலிருந்தனர்) உயர் சாதி யினர் பிற தேசங்களில் சமவாழ்வு நடத்தியும் வந்தனர். மீண்டும் அந்த விரிவற்ற சமுதாயத்துக்குத் திரும்பும் பொழுது, பழையபடி சம்பிரதாயங்களைப் பேணி வந்த னர். இதனால்தான் "ஆணையிற வுக்கங்காவை எல்லோரும் ஒண்டு தான்" என்ற தொடர் வழக்கில் வரவாயிற்று. (இக் கருத்து உண் மையான யாழ்ப்பாணத்தின் சமூக வெல்லை ஆணையிறவே என்பதை யும் காட்டுகின்றது).

யாழ்ப்பாணத்து மனிதனைப் பற்றி கூறப்படும் கருத்துக்கள் எவ் வாறு ஏற்பட்டன என்பதையுணர்த் தும் யாழ்ப்பாணத்துப் பின்னணி இதுதான் (முன்னர் கூறியது போல, கருத்துக் கூறுபவர்களின் பின்னணியும் கருத்தின் தன்மை யைத் தீர்மானிப்பதில் முக்கிய இடம் பெறும். ஆனால் இங்கு நாம் அதை ஆராய வேண்டிய தில்லை.)

யாழ்ப்பாணத்துக்கேயுரிய சிறப்பான சமூகப் பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதற்கான திறவு கோலும் இதுதான். சாதிப் பிரச் சினை, தமிழரசியற் கட்சிகளின் அமைப்பும் அவற்றின் நோக்கங் களும் பற்றிய பிரச்சினை ஆகிய வனவற்றை விளங்கிக் கொள்ள இக் கண்ணோட்டம் பயன்படும்.

பிற தமிழ்ப் பிரதேசத்தினர் மனதிலுள்ள யாழ்ப்பாண மேலாண் மை பற்றிய கருத்தையும் விளங் கிக் கொள்ள இது உதவலாம். மொழியொருமையிலும் பார்க்க தமது குறுகிய சமூக ஒருமையை யாழ்ப்பாணத்தார் விரும்பிய மையே இதற்குக் காரணமாகும். வன்னிப் பகுதி, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலுள்ள சமுதாய பொருளாதார அமைப்பு யாழ்ப் பாணத்து அமைப்பினின்றும் வேறு பட்டன என்பதையும் மனதிலிருத் திக் கொள்ளல் வேண்டும்.

ஆனால் நாம் இதுவரை பார்த்த இந்த "யாழ்ப்பாணத் தான்" தொடர்ந்தும் மாறாது இரு க்கின்றானா என்பதுதான் முக் கிய பிரச்சினையாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன: ஏற்பட்டு வருகின்றன. இலவசக் கல்வி, தமிழ் மொழி மூலம் கல்வி, மாறி வரும் தேசிய அர சியல் நிலமை, வாக்குரிமையின் முக்கியத்துவம் பற்றிய உணர்வு, (இரகசிய வாக்கெடுப்பளித்த துணிவு), குடியேற்ற திட்டங் கட்குச் செல்லல். விவசாயமல் லாத பொருளாதார முயற்சி

www.tamilarangam.net

களின் வளர்ச்சி ஆகியன யாழ்ப்பாணத்து அக வாழ்க்கையை மாற்றி வருகின்றன.

இலவசக் கல்வியால் பல சாதியினரும் கல்வி வசதியைப் பெறுகின்றனர். இதனாலும், தமிழ் மொழி மூலக் கல்வியினாலும் ஒரு குறிப்பிட்ட சாதியினரின் கல்வித் தனியுரிமை இப்பொழுது பூரணமாகத் தகர்க்கப் பட்டுள்ளது. சாதியமைப்பிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. கம்மாளச் சாதியினர் (Artisans) ஒன்றாகவும் தாழ்த்தப்பட்டோர் ஒன்றாகவும் இணையுமளவுக்கு கலப்பு மணங்கள் நடைபெறுகின்றன. சாதி உயர்வு, தாழ்வுகளை மதிக்காத கலப்பு மணங்களும் உண்டு. கற்றோரிடையே சாதிச் சம்பிரதாயங்கள் போற்றப்படுவது குறைகின்றது. ஆணையிறவுக்கப்பால் குடியேற்றங்கட்குச் செல்வதால், பிரதேச உணர்வு குறைகின்றது. புதிய பொருளாதார முயற்சிகளால் சாதித் தொழிலடிப்படை அருகுகின்றது. அரசியல் மாற்றங்கள் காரணமாக தமிழ்பேசும் இனம் எனப் பிற பிரதேசத் தமிழரையும் முஸ்லீம்களையும் இணைத்துக் கொள்வதற்கான எண்ணம் வளர்க்கப் படுகின்றது. இவற்றாலேற்படும் மாற்றங்களால் சிங்கள மக்களுடன் இணைந்து வாழ வேண்டுமென்ற தேசிய உணர்வு பிறக்கின்றது. தமிழ் பேசும் இனம் என்ற கோட்பாட்டு பொருளாதார அடிப்படையற்றவொன்றான படியால் அக்கோஷம் தற்காலிகமானதாகவே இருக்கும் தேசிய நிலையில் சமவாய்ப்பும், இனநேசமும் ஏற்படும் பொழுது இக் கோட்பாடு மறைந்து விடும். இத் தகைய புதிய சூழ்நிலையில் தோன்றுபவன் பழைய யாழ்ப்பாணத்தானாக இருக்க முடியாது. இம் மாற்றங்கள் தோற்றுவிக்கும் புதிய தலைமுறை உருவாகிக் கொண்டிருக்கின்றது. இப்பொருளாதார அரசியல் மாற்றங்கள் பூரணமாக ஏற் பட்ட பின்னரே புதிய சமூக எற்பாடு தனிப்பட்ட கருத்துருவம் பெறும். அப்பொழுதுதான் பழைய "யாழ்ப்பாணத்தான்" என்பவன் இல்லாது போய் விட்டான் என்ற உணர்வு ஏற்படும்.

நாளை வரவிருக்கும் சமுதாய மாற்றத்தின் முன்னோடி இன்றைய அறிவியக்கங்களே. வளர்ச்சிப் படியாகக் கொள்ளப்பட்ட தேசிய இலக்கிய கோஷம் நாளை வருவதை உணர்த்துவதாகும். அந்த இலக்கிய கோஷத்தை முன்வைத்த பெருமை, பிணக்கும் சுரண்டலு மற்ற புதியதொரு சமுதாயத்தைத் தோற்றுவிக்க விரும்பும் ஈழத்து தமிழ் எழுத்தாளர் எல்லோர்க் கும் உரியதாகும்.


முற்றும்.

* இக்கட்டுரையில் வரும் சாதியின் பெயர்கள் தவிர்க்கப் பட்டுள்ளன.

(இக்கட்டுரை 'ஈழத்தில் தமிழ் இலக்கியம்' எனும் நூலிலிருந்து எடுக்கப் பட்டது.)

www.tamilarangam.net

# "டோபின்" பூங்காவினுள்ளே...



தி - உருத்திரன்

கைக்கடிகாரத்தை அடிக்கடி பார்த்தபடியே விரைந்து கொண்டிருந்தேன். இன்னும் பத்து நிமிடத்தில் மைக்கலைச் சந்திக்க வேண்டும். மைக்கல் "டோபின்" பல்கலைக்கழகத்தில் சமூக அரசியல் துறையில் இறுதியாண்டு மாணவன். உலக அரசியல் அசைவுகளில் ஆர்வம் கொண்டவன். வளைகுடாப் பிரச்சினை தொடர்பாக அவனிடமிருந்து பல விடயங்களை தெரிந்து கொள்ள விரும்பி அவனை இன்று சந்திப்பதாக தெரிவித்திருந்தேன்.

வழமையாக நாம் சந்திக்கும் பூங்காவை நான் அடைய, அவனும் எனக்காகக் காத்து நின்றான். சம்பிரதாயமான மாலை வணக்கம்...கைகுலுக்கல்களின் பின் நேரத்தை விரயமாக்காது நேரடியாகவே அவன் பிரச்சினைக்கு வந்து விட்டான்.

"ஏதோ முக்கிய விடயத்தைப் பற்றி பேசவேண்டும் என்றாயே கந்தா(கந்தசாமி) என்ன அது என்றான் மைக்கல்.

"பத்திரிகைகள், ரெலிவிஷன் எல்லாவற்றிலும் முதவிடம் பிடித்திருக்கும் வளைகுடாப் பிரச்சினையைப் பற்றித்தான்

இன்றோ அல்லது நாளை போர் தொடங்குமென்று நினைக்கிறேன். இதுபற்றி நீ என்ன நினைக்கிறாய்" என்று நான் ஆரம்பித்தேன்.

என் சொற்களைக் கேட்டு சிரிக்க ஆரம்பித்த மைக்கல், "என்ன கந்தா இன்னும் சிறுபிள்ளைத்தனமாகக் கதைக்கிறாய் போர் ஒன்று தொடங்கினால் ஏற்படப்போகும் விளைவுகளை இரு தரப்புமே உணர்ந்திருக்கின்றன. அதனால் இது பெருமளவில் மிக நீளமாக இழுபடப் போகும் ஒரு வாய்ப்போராகவே இருக்கும்" என்றான்.

"என்ன மைக்கல் இது. பைத்தியக்காரத்தனமான பேச்சாக இருக்கின்றது. ஈராக் ஒரு தரப்பிலும், மறுதரப்பில் அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா மற்றும் இதர நாடுகளும் பல்லாயிரக்கணக்கில் படைகளைக் குவித்தும் விமானங்கள், போர்க்கப்பல்கள், ஏவுகணைகள் மற்றும் நவீன ஆயுதங்களைக் குவித்தும் யுத்தத் தயாரிப்புக்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துரிதப் படுத்துகின்றன. அறிக்கைகள் இரு தரப்பிலும் சூடு பறக்கின்றன. ஆனால் நீ இப்படிச் சொல்கிறாயே"

"கந்தா நீ சொல்வதை நான் மறுக்கவில்லை. ஆனால் இந்த யுத்த தயாரிப்புக்கள் யுத்தத்துக்காக அல்ல. இரு தரப்புமே தமது பலத்தையும் ஆதிக்க வெறியையும் காட்டுவதற்கான முயற்சிதான் இது."

"அப்படியென்றால் இதில் எந்த தரப்பின் பக்கம் நியாயம் இருக்கின்றது என்றாவது சொல்வேன்".

"கந்தா இது விவாத மேடையல்ல. மக்களின் நலன்களை மனதில் கொள்ளாத ஆதிக்க வெறி பிடித்தவர்கள் நிகழ்த்துகின்ற அராஜகம். இங்கே எந்தத் தரப்புமே நியாயம் அற்றவை. குவைத்தின் மீது ஈராக் நடாத்திய ஆக்கிரமிப்பு அநீதியானது. அதற்காக சதாம் ஹூசைன் கூறும் காரணங்கள் இன்னும் விநோதமானவை. வரலாற்று ரீதியாக குவைத் ஈராக்கின் ஒரு பகுதி என்கிறார். ஈராக்கின் எண்ணெய் வளத்தை குவைத் இரகசியமாகச் சுரண்டியது என்கிறார். அனைத்துக்கும் மேலாக வல்லரசு நாடுகளின் அடிவருடியாக குவைத் செயல்பட்டு பெற்றோல் விலையை அந்நாடுகளுக்குச் சாதகமாக வைத்திருக்க, குவைத் முயல்கிறது என்றும் குற்றம் சாட்டுகிறார் சதாம். ஆனால் இவ்வளவு காலமும் ஈரானுடனான ஈராக்கின் நீண்ட போருக்கு குவைத் பெருமளவு நிதியை அளித்து வந்த காலத்தில் சதாம் ஏன் இந்த உண்மையைச் சொல்லவில்லை என்று தெரியவில்லை".

"அப்படியானால், ஏன் மைக்கல், சதாம் இந்த ஆக்கிரமிப்பில் இறங்கினார்?"

"ஈராக்குடனான போர் முடிந்து விட்டது. பொருளாதாரச் சிதைவுகளினால் ஆத்திரம் கொண்ட ஈராக் மக்களின் கவனத்தை திசை திருப்ப வேண்டும். அயத்துல்லா கொமெய்னியின் மறைவுக்குப் பின் அரபு மக்களின் ஏகபோகத் தலைவனாக வரவேண்டும். இவற்றுக்கெல்லாம் இலகுவான களம் குவைத்தேதான். அதனால் அதனை இலகுவாக ஆக்கிரமித்து இணைத்துக் கொண்டார்".

"அப்படியானால் அமெரிக்கா பிரான்ஸ், பிரித்தானியா, சவுதி அரேபியா மற்றைய நாடுகளின் தரப்பில் நியாயம் இருக்கிறது என்கிறாயா?"

"இல்லை கந்தா, முதலில் சதாமுக்கு போர் வெறியைக் கிளப்பியதே இந்த நாடுகள் தான். ஈரானுடனான போரில் நவீன ஆயுதங்களை வழங்கி ஈராக்கை தோல்வியிலிருந்து காப்பாற்றியது பிரான்ஸ். அடுத்தது இந்நாடுகள் குவைத்தைக்

www.tamilarangam.net

காப்பாற்ற எந்த முயற்சியும் எடுக்கவில்லை. இந்நாடுகளின் "சர்வ வல்லமை பொருந்திய" உளவுச்சேவை நிறுவனங்கள் குவைத் மீதான ஈராக்கின் ஆக்கிரமிப்புக் குறித்து எந்த வித ஆரம்பத் தகவலையும் கொடுக்கவில்லை. உண்மையிலேயே இந்நாடுகள் தங்கள் அபிமான அடிவருடியான சவுதி அரேபியாவை காப்பாற்ற எடுக்கும் நடவடிக்கைகள்தான் இவை.

அது மாத்திரமல்ல கந்தா, ஈராக் நடத்திய அதே செயலைத்தானே சிறு காலத்திற்கு முன் பனமாவிலும், கிறெனடா விலும் அமெரிக்கா செய்தது. அப்போது மற்ற நாடுகள் என்ன செய்தன?"

"அப்படியானால் மைக்கல், ஐ.நா சபையின் நடவடிக்கைகள் பிழையா?"

"கந்தா, அமெரிக்காவின் கடந்த கால நடவடிக்கைகளின் போதும், இஸ்ரவேல் பாலஸ்தீனத்தையும் இதர அரபு நாடுகளின் நிலத்தையும் ஆக்கிரமித்த போதும் ஏன் இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை?"

"அப்படியென்றால் இனி என்ன நடக்கப் போகிறது. வெல்லப் போவது யார்?"

"இங்கே யாரும் வெல்லப் போவதில்லை. ஆனால் இழுபடும் ஒவ்வொருநாளும் சதாமின் பலம் கூடுகின்றது. சதாம் விஷவாயுவை பிரயோகிக்கப் போவதாக மிரட்டியது பெரும் அச்சத்தையூட்டியுள்ளது. அது மாத்திரமல்ல. பொருளாதாரத் தடைகளை மீறி ஈராக்குக்கு ஈரான், ஜோர்தான் ஊடாக உணவுப் பொருட்களை வழுங்கி வருகின்றது. அதேசமயம் மறுதரப்பில் பல நாடுகளின் இராணுவத்தினரிடையே யாருடைய உத்தரவை செயல்படுத்துவது என்பதில் குழப்பம். வளை குடாவில் அமெரிக்காவின் ஆளுமையை விரும்பாத பிரான்ஸ், மேலதிக இராணுவத்தை அனுப்பியதுடன் பிரெஞ்சு ஜனாதிபதி மேற்கொண்ட வளை குடா விஜயமும் இந்நாடுகளுக்கிடையே எழுந்துள்ள குத்து வெட்டுக்களைக் காட்டுகின்றன. அதே சமயம் கடுமையான வெப்பமும் இதர இஸ்லாமிய கட்டுப்பாடுகளும் குவிந்துள்ள இராணுவத்தினரிடையே பொறுமையின்மையை ஏற்படுத்தியுள்ளன.

அத்துடன் ஒரு பீப்பா எண்ணெய் 18 டொலரிலிருந்து இன்று 36 டொலராக அதிகரித்து சகல நாடுகளிலும் பெரும் பொருளாதார நெருக்குவாரத்தை கொடுத்துள்ளது".

"அப்படியானால் மைக்கல் இதில் யாருக்கும் வெற்றி இல்லையா?"

"யாருக்கு வெற்றி என்பது வேறு விடயம். ஆனால் பாதிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கப் படுவது ஏழை நாடுகளும், ஐரோப்பாவில் வாழும் தொழிலாள வர்க்கமும்தான். எண்ணெய் விலை உயர்வு வாழ்க்கை செலவை உயர்த்தியுள்ளது. உதாரணமாக பிரான்சில் பணவீக்கம் மீண்டும் அதிகரிக்க ஆரம்பித்துள்ளது. அரசு 1991ம் ஆண்டுக்கான ஊதிய உயர்வுகளை ரத்து செய்ய தீர்மானித்து விட்டது. மேலதிக வருமான வரி விதிக்க ஆலோசித்து வருகின்றது. அதே சமயம் இந்தியா, இலங்கை போன்ற நாடுகள் ஈராக்குடனான தமது ஏற்றுமதி வருமானத்தை இழக்கின்றன. மத்திய கிழக்கில் வேலை செய்த பெருமளவு தொழிலாளர்கள் வெறுங்கையுடன் திரும்புவதால் பெருந்தொகையான அந்நிய செலவாணியை இழக்கின்றன. போதாதற்கு எண்ணெய் விலை உயர்வும் கழுத்தை நெரிக்கின்றது.

"பார்த்தாயா கந்தா, இதைத் தான் நான் சொன்னேன் மக்களைப் பற்றிச் சிந்திக்காத மிலேச்சர்கள் நடத்தும் ஆதிக்க சாம்ராஜ்யம் என்று. சரி இன்று நேரமாகிறது. மீண்டும் அடுத்த தடவை சந்திப்போம்" என்று மைக்கல் கைகுலுக்கி விடைபெற்றான்.

அடுத்த இதழில்...

**தொடர் 3**

**கோடீஸ்வரப்பிரபுவுடன் ஒரு சந்திப்பு....**

**சஞ்சிகையில் வெளியாகும் ஆக்கங்களுக்கு ஆக்கதாரர்களே பொறுப்பாளிகளாவர்.**

**ஆசிரியர் குழு**

அட்டை ஓவியம்: **சாம்லன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நம்பிக்கைகள் கண்ணாடி வார்ப்புக்கள் அல்ல

அண்மைக்கால வாழ்வுக்கணங்களில் தேசிய சர்வதேச மட்டங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டு வருவதைக் காண்கின்றோம். சர்வதேச அரங்கில் ஒருமைப்படுத்தப் பட்ட புரிந்து கொள்ளலிலான புரட்சிகர எண்ண மாற்றங்கள் உருவாகி வருவது வரவேற்கத்தக்கது. ஆயினும், நடைமுறையிலான உலக விவகாரங்கள் இன்னும் தெளிவற்ற நிலையிலேயே உள்ளன.

உலக மக்கள் பாதுகாப்பு என்பது இயைவை நோக்கி சரிவர நகர்த்தப் படவில்லை. அதன் உறுதியின்மையிலான விடாப் பிடிகளை இற்றைவரையிலும் சந்தேகக் கண்ணோட்டத்திலேயே எதிர் நோக்கவேண்டியுள்ளது. சர்வதேசச் சட்டக் கோவைகள் ஒரு பக்க சார்பாக இருப்பதனால் மனித உரிமைகள் மீறப்படுவதோடு முழுமையாக நகர்த்தவும் படுகின்றன. ஆயுத அதிகரிப்பினை நோக்கிய உற்பத்தியல்லாத பாதீட்டுத் திட்டங்களில் திருப்திகரமான மாற்றங்கள் எற்பட் டிருக்கின்றன என்பது ஐயப்பாடே. வறுமைக்கோட்டில் வாழும் மக் கள் தொகுதி பெருகிக் கொண்டே போகின்றது. நாடுகளுக்கிடையி லான பொருளாதார இடைவெளி கள் பாரிய அளவில் விரிவாகி வருவதோடு அவைகள் ஸ்திரத்தன்மைகளையும், ஏமாற்றங்களையும், பயமுறுத்தல்களையும் பொறுப்புக்களையும் ஏற்கும் வகையில் எதிர் கால சமுதாயத்தை நோக்கி நகர்த்தப் படுகின்றன.

இன்றைய காலகட்டத்தில் நிகழ்கால மக்கள் பிரச்சினைகள் புதிய வடிவில் திசை திருப்பப் பட்டிருக்கின்றன. புதிய தொழில் நுட்பங்கள், நவீன அரசியல் அறிமுகங்கள் முன்னொரு போதும் இல்லாதவாறு தீர்வு காண முடியாத வகையில் இறுக்கப் பட்டிருப்பதைக் காண்கின்றோம். இவைகளுக்குப் புதிய திட்ட முன்வைப்புக்களாலேயே தீர்வு காணமுடியும். ஆயினும், கடல், தரை, விண்வெளி ஆயுத உற்பத்தி குறித்த அண்மைக்கால உடன்படிக்கைகள் சமாதானத்தை நோக்கிச் சரிபடுத்தப்பட்டுள்ளன என்பதில் உண்மையில்லாமலில்லை.

புதிய விஞ்ஞானக் கருத்துக்களும், தொழில் நுட்பங்களும் உலக மக்கள் வாழ்வு, கலாச்சாரப் பண் பாட்டின் மையங்களை நோக்கி நெறிப்படுத்தப்படல் வேண்டும். தற்கால நிகழ்வுகளில் அதிகளவில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. இவ்வாறான விகற்பங்கள் ஏன் உருவாகின்றன என்பதில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும்

www.tamilarangam.net

ிதன் மூலக்கருவை அறிவதோடு, அதற்கான விளக்க ரீதியான ரிந்து கொள்ளல்களை ஏற்படுத்து திலேயே சரியான தீர்வு தங்கி ள்ளது.

அனைத்துச் சர்வதேச ஸ்தாப ங்கள், மக்கள் தலைமைப் பீடங் ள் (மற்றும்) என்பவைகள் பிரச் னைகளைத் தீர்ப்பதில் முக்கிய ங்களிப்பை நல்கவேண்டும். நல்ல டிவுகளைத் தரும் வகையில் மூக சு பொருளாதார விரிவாக்கங் கள் ஏற்படுத்தப் படல்வேண்டும். மூன்றாம் உலக நாடுகள், அபி விருத்தியடைந்த நாடுகள் என்ப வற்றுக்கிடையிலான இடைவெளி கள் சற்றேனும் குறைக்கப் படல் வேண்டும். இவ்வாறான நிலை களிலேயே தற்போது புதியதோர் சௌஜன்ய உலக சமுதாயத்தை உருவாக்க முடியும்.

**கங்கா புஷ்பாகரன்**

★

## வசந்தன் மணிக்கதை-7

### குற்றம்

பாரிய நோய் பீடித்து, நெடுங்காலம் ஆஸ்பத்திரியில் உயிரோடு போராடி, எலும்பும் தோலுமாக அவர் வீடு வந்து சேர்ந்தார்.

வெகு அக்கறையோடு வழக்கமாகச்சுகம் விசாரித்து எழுதுகிற மகளின் கடிதம் இன்றும் வந்திருக்கின்றது.

"காலை இரண்டு முட்டையடித்த கோப்பி, பிறகு இரண்டு தோடம்பழங்கள், மத்தியானம் மாட்டு ஈரல், மாலை பால், இரவு மாடுச் சூப்போடு சாப்பாடு, மீன், இறைச்சி, முட்டை, பால், பழம்— இப்படியான உணவுவகைகளை ஒழுங்கு தவறாமல் ஒவ்வொரு நாளும் சாப்பிட்டுக் கொள்ளவேண்டும்." என்றெல்லாம் வாஞ்சையுடன் எழுதியிருந்தாள், மகள்.

"மகனே, டாக்டரும் இப்படியான சத்துணவு வகைகளையே நாள் தோறும் சாப்பிடும் படி சொல்கிறார். எனது உடல் தேறுவதற்கு இவை அவசியம் என்பதை நானும் அறிவேன். ஆனால், என் கையில் வேண்டிய காசு இல்லை; பணத்திற்குத் திண்டாட்டமாயிருக்கிறது. என்ன செய்வது? இதை உமது சித்தத்திற்கே விட்டு விடுகிறேன்" என்று பதில் எழுதினார் தந்தை.

இதன் பின், அந்த மகள், இந்தத் தந்தைக்குக் கடிதம் எழுதுவதேயில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தென்றலாயிருப்பினும்.

அசைவன அசையட்டும்
ஆடுவன ஆடட்டும்
ஊர்வன ஊரட்டும்
இப்போதைக்கு என்னை
விட்டுவிடு.

காற்றில் அசையும் பூக்களையும்,
அலையில் ஆடும்
வெண்நுரைக் குமிழ்களையும்,
சிறைப்படாமல் ஊருகின்ற
சின்னத் தென்றலையும்
இப்போ என்னால்
ரசிக்க முடியாது.

பூங்காற்றும்
சுடும்வேளை இது
பூக்களை எப்படி
என்னால் ரசிக்க முடியும்?

பட்டினி அலையில்
அலைக்கழியும் வயிற்றோடு
அலையின் எச்சங்களை
நான்
எங்கனம் ரசிப்பேன்?

எனது பசியை
முதலில்
தீர்க்க முடியுமா உன்னால்?
இல்லை:

எனது தாகத்தையாவது
போக்க முடியுமா பார்!
பசி, தாகம்
இவைகள்
இவைகளாகவேயிருக்க
இயற்கையை ரசிக்க
எப்படி முடியுமென்னால்?

எனது பசி, தாகம் தீரட்டும்
அதன் பின்பு வா.
இயற்கையின் வதனங்களை
நிறையவே ரசிப்போம்.
சாவகாசமாய் உட்கார்ந்தே
பேசுவோம், எழுதுவோம்.

வேண்டுமானால்
இப்போ எனது
தீயிலும் வேகாத
தீய துயரங்கள் தீரும் வழியை
பேசுவோம்......

பட்டினி உலையில் கொதிக்கும்
என் குழந்தைகளின்
பசி வயிற்றை
சிறிது சிந்திப்போமே....

போ.... போ....
நீ
ஜீரணமாவதற்காக
தென்றலைப் பருகுவேன்,
தென்றலாயிருப்பினும்
காற்றைக் குடித்து - என்
தாகம் தணியாது, பசியும் தீராது
போ போ....

-தமயந்தி-

நோர்வே

www.tamilarangam.net

# மலையக எழுத்தாளர்
# என்.எஸ்.எம்.ராமையா...
***********************************

— எஸ்.ஏ.

எமது நாட்டில் வேதனை துன்பம் சோதனை மிகுந்த இவ்வேளையில், என்.எஸ்.எம். இராமையா மறைவு ஈழத்து இலக்கியப் பரப்பிற்குப் பாரிய இழப்பு. பொதுவாக இலங்கையும், குறிப்பாக மலையகமும் ஒரு மானித எழுத்தாளரை இழந்துவிட்டது.

கே.கணேஷ், சி.வேலுப்பிள்ளை, சாரல்நாடன், தெளிவத்தை யோசேப் வரிசை மருவி மதிப்பிடத்தக்க அவரின் சிறுகதை, வானொலி நாடகம், கட்டுரை ஆக்கங்கள் காற்றோடும் பத்திரிகைகளோடும் தொங்கிவிட்டன. இந்நிலையில் அவரின் பிரசித்தி பெற்ற "ஒரு கூடைக் கொழுந்து"க் கதைத்தலைப்பில் ஒரு சிறுகதைத் தொகுப்பை அவர் வாழ்ந்த காலத்திலேயே வெளியிட்ட பெருமை மு.நித்தியானந்தனுக்குரியது.

இளம்பராயத்தில் மலையக மக்கள் வாழ்கையோடு ஒன்றித்துப்போன இராமையா இலக்கியக் களத்தில் கால் வைத்த போதே அதே மக்களின் பிரச்சினைகளை மையப்படுத்தி சிறுகதை, வானொலி நாடகம், கட்டுரை ஊடாக ஈழத்து இலக்கிய உலகிற்கு உரம் சேர்த்தார்.

இலக்கண மொழி வழி நின்று இலக்கிய மரபு கோலோச்சிய போக்கினின்று தேசியத்தன்மை, தேசியத் தனித்துவம், ஈழத்து மண்வாசனை, யதார்த்த வாழ்வு நெறி என்னும் கோட்பாட்டினை முன்னெடுத்துச் சென்ற இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் ஆதர்ஸராக விளங்கிய ராமையா, இறுதிவரை தன் எழுத்தில், கருத்தில் இவற்றிற்கான வச்சிரம் சேர்த்தமை அவர் இலக்கியத்திற்கு உயிர்ப்புடைத்தாயிற்று.

செல்லரித்துப்போன "கலை கலைக்காக" என்னும் தன்னிச் சாபூர்வ இலக்கியக் காரராகவன்றி, கலையும் இலக்கியமும் மக்களுக்காக, சமுதாய முன்னேற்றத்திற்காக, மக்கள் வாழ்வுக்கு வழிகாட்டியாக என்று படைத்தமை அவர் சிறப்பு.

இதன்பால் அவர் தமிழ் இலக்கியத்திற்கு அழுத்தம் சேர்த்தவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர் எழுத்தில் மலையக மக்களின் ஏக்கங்கள், துயரங்கள், விருப்பு வெறுப்புக்கள், எதிர்பார்ப்புக்கள் மட்டுமன்றி அவர்களின் பேச்சு மொழியும் தத்ரூபமாக வெளிப்படும். சம்பவங்கள் யதார்த்தபூர்வமாகச் சித்தரிப்பதில் இவர் கதைகள் காலத்தைக் காட்டும் கண்ணாடியாகத் திகழ்வன.

எந்தச் சித்தாந்தக் கோட்பாடுகளுக்கும் அவர் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாதபோதும், அவர் இலக்கியங்கள் ஏதோவகையில் சித்தாந்த நெறிப்பாட்டுச் சார்புத் தன்மையுடையனவாகவே விளங்கின. அவர் பேனா எப்போதும் பாட்டாளி வர்க்க மக்கள் பக்கம் நின்று அவர்களுக்காகவே எழுதியது. 'எந்தவோர் இலக்கியவாதியும் வர்க்க சார்பற்ற இலக்கியம் படைப்பதில்லை. அவர் ஏதோ ஒரு வர்க்கம் சார்ந்தே படைக்கின்றார்' என்பதற்கு இராமையாவின் சிறுகதைகளும் தக்க சான்று.

●

# ராமையா கதைகள் பற்றி......

மு.நித்தியானந்தன்

*ஒரு கலைஞனின் தேடல் வெறும் புறத்தோற்ற அவதானிப்புகளோடு மாத்திரம் முடிவுபெற்றுவிடுவதில்லை. இப்பிரபஞ்சத்தில் மனிதன் மாத்திரமல்ல, மானுட அனுபவம் கருக்கொள்கின்ற யதார்த்த இயக்கங்கள் அனைத்தும் கலைஞனின் தேடலுக்கு இலக்காகின்றன. வரலாற்றின் வீச்சில், சமூகங்களின் வளர்ச்சிப்போக்கில் பௌதிக உலகின் சிக்கலான பல்வேறு அம்சங்கள் மானுட யதார்த்தத்தினுள் சிறைப்பிடிக்கப்படுகின்றன. இதற்கேற்ப கலைஞனது தேடல் இலக்கின் பரிமாணங்கள் அகலிக்கின்றன. இத்தேடல் சித்திக்க கலைஞனின் பார்வையும் விசாலித்தல் காலத்தின் நிர்ப்பந்தமாகிறது. அவ்வக்காலகட்டத்தில் யதார்த்தத்தின் வெவ்வேறு அம்சங்களின் தனிப்பட்ட அழுத்தம், அகலிப்பு, அர்த்தம், பெறுமானம் போன்றவற்றிற்கு சவாலாக கலைஞனின் தேடலில் ஆழமும் வீச்சும் உருக்கொள்வதே விரும்பத்தக்கது.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வர்க்க பேதங்கொண்ட சமுதாயத்தில் மானுட யதார்த்தத்தின் வளர்ச்சிக்கும் கலைஞனின் பார்வை அகலிப்பிற்கும் ஒத்தியைபு இருப்பதில்லை. சமூக இழைகளிலிருந்து, உற்பத்தி உறவுகளிலிருந்து கலைஞனும் அந்நியமாக்கப்பட்டுவிடுகிறான். அவன் அந்நியமாகிப் போய் விடுவதினால் சமூகத்தின் மொத்த இயக்கத்தை நேராகப் பார்க்க இயலாமல் சிதைந்த உருவங்களையோ உருத்திரிந்த பிம்பங்களையோதான் தரிசிக்கிறான்.

இந்த மானுட யதார்த்தத்தின் முழுமையை உணர்பவன் அதன் ஒரு விளைவேயான மனித அநியாயத்துக்கு பரிகாரம் தேடுகிறான். இந்த யதார்த்தத்தின் பூரணம் புரிபடாத வேளையில் ஒரு கலைஞன் வாழ்க்கைக்கு என்ன அர்த்தம் கற்பிக்கிறான்?

அவலத்தின் மத்தியிலும் சமூகப் புன்மையால் சூழப்பட்டும் சிறுமையும் மலினமும் [illegible] அக்கதியிலிருந்து மீட்டெடுத்து அவனுக்கு ஒரு பெறுமானத்தை அளித்து அவனை ஒரு உயர்ந்த இடத்தில் வைத்துப்பார்க்கிறான். அதாவது யதார்த்தத்தின் இயக்கத்துக்கு முழு விளக்கத்தையும் 'மனிதன்' என்ற எண்ணக்கருவின் தளத்திலிருந்தே பெறமுயல்கிறான். இதன் விளைவாக தினசரி வாழ்க்கை வட்டத்தினுள் உழன்றுகொண்டிருக்கும் அந்நியமாக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட சராசரி மக்களிடையேயும் நம்பிக்கை ஒளிர்விடுகின்ற ஒருயர்ந்த மனுக்குலத்தைக் காணமுற்படுகிறான்.

இப்படியான கதாபாத்திரங்களை சிருஷ்டிக்கும் ஒரு கலைஞன் குறைந்த பட்சம் ஒரு மனிதாபிமானியாகவாவது இருந்தாலே இத்தரிசனம் சாத்தியமாகும்.

என். எஸ். எம். ராமையாவின் சிறு கதைகளிலே நாம் காணுகின்ற கதாபாத்திரங்கள் அன்றாட வாழ்க்கைப் போராட்டத்தில் சிக்கித் துயருறும் தனிநபர்களாவர். ஆனால் இப்பாத்திரங்கள் பெயரற்ற உயிரிகளல்லவர்; ஆளுமைநசித்துப் போனவர்களல்லர். வாழ்க்கையின் பிரச்சினைகளுக்குத் தங்கள் தனிப்பட்ட சொந்த ஆளுமையின் பலத்தினால் சவால் விடுகின்றனர்.

தன் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காகத் தன் சொந்த ஆசைகளை அழித்து விடுகிறாள். 'நிக்குளிப்பில்' வரும் ரஞ்சிதம். எப்பாடு பட்டேனும் தங்களுக்கும் ஒரு பெற்றோமாக்ஸ் லைட் வாங்கிவிட வேண்டுமென்று முடியாத வயதிலும் மண்ணோடு போராடுகிறான் 'வேட்கை'யின் சங்கையாக் கிழவன். காடு எரிந்தால் மழை பெய்யும் என்ற நம்பிக்கைக்காக தான் பாடுபட்ட சேனையையே நள்ளிரவில் எரித்து விடுகிறான் 'மழை'யில் வரும் மாணிக்கம். வாயில் இரத்தம் கசியக் கசிய தன்னுழைப்பின் நேர்மையை கணக்குப்பிள்ளைக்கும் ஊராருக்கும் வைராக்கியத்துடன் நிறுவுகிறாள் 'ஒரு கூடைக் கொழுந்தின்' அஞ்சலை. முழு ஊரையும் எதிர்த்து குகையின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மத்தியில் தங்கள் காதல் பயணத்தை துணிச்சலோடு ஆரம்பிக்கிறார்கள் 'ரோமியோ' வகை ஜோடிக் காதலர்கள்.

ஆனால் வர்க்க பேத சமுதாயத்தில் தனிநபர்களாக அந்நியமாக்கப்பட்ட உதிரிகளாக ஜீவிப்போரின் ஆளுமை நசிந்துப் போவதே நியதி. மாறாக ராமையாவின் கதைகளில் வரும் பாத்திரங்கள் முழு யதார்த்த இயக்கத்துக்குச் சவால் விடுவோராகக் காணப்படுகின்றனர். அதில் தோல்வியுற்றாலும் அந்தோல்விகூட ஆராதிக்கப்படுகிறது; லட்சியமயப்படுத்தப்படுகிறது. ராமையாவின் கதைகளில் நாம் காணும் இத்தகைய போக்கு ஒரு மனிதாபிமானப் பார்வையின் முழு அர்த்தத்திலில்லாவிட்டாலும் அதன் ஒரு எளிமையான வடிவத்தின் வெளிப்பாடு எனக்கொள்ளலாம்.

மானுட யதார்த்தத்தை அதன் சரியான பரிமாணங்களில் இனங்கண்டு கொள்ளமுடியாத நிலையில் தனிமனிதனுக்கும் அவனைச் சார்ந்திருக்கும் சூழல் யதார்த்தத்துக்குமிடையிலான தொடர்புகளில் உண்மையான முரண்பாடுகள் – முரண்பாடுகள் அற்றவை போன்று மங்கலாக தெரிவதனால் புறமொதுக்கப்பட்டும் வேறு சக்திகள் பூதாகரமானவையாயும் மனித ஆளுமையை மீறியவையாயும் மனிதனின் விரோத சக்திகளாயும் சித்திரிக்கப்படுதல் இயல்பு.

இத்தகைய போக்கு ராமையாவின் கதைகளில் சற்றுத் தூக்கலாகவே தெரிகிறது. ரங்கையாக் கிழவனின் ஆசைகள் நிராசையாகிப் போவதற்கு அவன் பொருளாதாரம் அல்ல அவன் தோட்டத்தை அழித்த மழையும் மலைச் சரிவுமே காரணங்களாக அமைகின்றன. மழை இல்லாமல் போனதால் வந்த வரட்சியைச் சமாளிக்கத் தோட்டத்து நிர்வாகம் வேறொரு தீர்வைத் தேர்ந்தெடுத்திருக்கலாம் என்ற யோசனையே இல்லாமல் தாம் பாடுபட்டு வளப்படுத்திய மண்ணின் சேனையையே பணைக்காக விற்க முற்படுகிறான் மாணிக்கம்.

இந்தப் பின்னணியில் இயற்கை, விதி, மனித ஜீவிதத்தின் சூழல் வட்டம் போன்ற மனித ஆளுமைக்குப்பாற்பட்ட சக்திகள் என்று கூறப்படுபவற்றைச் சமாளிப்பதற்காக, சாதாரண மக்கள்திரளிலும் மேம்பட்ட லட்சியக் கதாபாத்திரங்களாக ரஞ்சிதத்தையும், அஞ்சலையையும், ரங்கையாவையும் மாணிக்கத்தையும் படைக்கவேண்டிய தேவை ராமையாவுக்கு ஏற்படுகிறது. இருந்தும் ராமையாவின் கதைகளில் வரும் கதாபாத்திரங்களின் இயக்கப்பாடுகள் அனைத்தும் உழைப்பு என்பதனையே தாரகமந்திரமாகக் கொண்டிருப்பது சிறப்பியல்பு என்று கூறலாம். மலையக மக்களின் வாழ்க்கையில் பிறப்பில் இருந்து சாவுவரையுள்ள சகல அம்சங்களும், நேர்மை, கண்ணியம், சமுகதர்மம் பற்றிய உணர்வு வகை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அனைத்தையும் இந்த மக்களின் உழைப்பு என்னும் உரை கல்லுக்கூடாகவே நிறுவுகிறார். கொழுந்து பறிக்கையிலேயே பிள்ளையைப் பிரசவிக்கும் தாயின் கதை மூலம் உழைப்பு இந்த மக்களின் வாழ்க்கையில் எப்படி பின்னிப் பிணைந்து போய் கிடக்கிறது என்பதை நன்கு உணர வைக்கிறார்.

1960களில் எழுத்துத்துறைக்குள் நுழைந்த என். எஸ். எம். ராமையா தன் எழுத்தின் வளத்தால் கடல் கடந்த இடங்களிலும் கௌரவத்தைப் பெற்றிருக்கிறார். குறைவாக எழுதி, கணிசமான வாசகர்களின் கவனத்தை ஈர்த்திருக்கிறார். மலையகம் என்ற பிராந்தியத்திற்கேயுரிய விஷேசமான தன்மைகளைக் கொண்டெழுந்த மலையகச் சிறுகதை இலக்கியத்திற்கு உருவம் சமைத்தவர் என்ற வகையில் ராமையா வரலாற்று முக்கியத்துவம் பெறுகிறார்.

மலையக மக்களின் துயரார்ந்த வாழ்வினை இலக்கியத்தின் ஒளியிலே தரிசிக்க முயன்ற முன்னோடிகளின் தொகுப்புக்கள் என்ற முறையில் என். எஸ். எம். ராமையாவின் ''ஒரு கூடைக் கொழுந்து'', தெளிவத்தை ஜோசப்பின் ''நாமிருக்கும் நாடே...'' ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுப்புகளுமே தனி ஒரு எழுத்தாளரின் தொகுப்பாக நம் கைகளில் கிடைத்திருக்கின்றன. மலையக இலக்கியத்தின் பங்கினை மதிப்பிட இவை போன்ற பல தொகுப்பு நூல்கள் வெளிவருவது அவசியம்.

# இலக்கியச்செய்தி

இந்த ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு மெக்சிக்கோ கவிஞரான ஒக்டாவியோ பாஸ் (Octavio Poz) என்பவருக்கு வழங்கப் பட்டுள்ளது. ஒக்டாவியா, சர்வியலிசம் சமுகவியல் சம்பந்தமான எழுத்துக்களில் பிரபல்யம் வாய்ந்தவர்.

முப்பதுக்கு மேற்பட்ட அரசியல் தத்துவ நூல்களை எழுதியுள்ள இவர் பிரான்ஸ், சுவிஸ், ஜப்பான் ஆகிய நாடுகளின் மெக்சிக்கோ தூதுவராகவும் கடமையாற்றியுள்ளார்.

இலக்கியம் சம்பந்தமான மிக உயர்ந்த பரிசாக இந்நோபல் பரிசு கருதப்படுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கலையும் இலக்கியமும்-3

—சத்தியமூர்த்தி

முன்னிதழில் இரண்டாம் கட்டமாக "ரஸவாதக்கலை இலக்கியங்கள்" பற்றி விளக்கிய நாம், மூன்றாவதாக, "கலையும் இலக்கியமும் பொழுது போக்கிற்காக" என்னும் கூற்றினை ஆராய்வோம்.

முதலில் ஓர் உண்மையை ஐயந்திரிபுற நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

கலையும் இலக்கியமும் அழகுருவத்தோடு மட்டுமன்றி, முழுமையாகவே கருத்தியலையும் தாங்கிவரும் படைப்புகளாதலால், அவை, களியாட்டங்கள் போன்றோ, விளையாட்டுச் சாதனங்கள் போன்றோ, கண்கட்டி வித்தைகள் போன்றோ ஒருபோதும் மக்களுக்கான "பொழுதுபோக்குச் சாதனங்களாக" இருந்ததில்லை; இருப்பதுமில்லைஎன்பதே அந்த உண்மையுமாகும்.

மகான் டால்ஸ்டாய் தொட்டு, மார்க்ஸிம் கார்க்கி ஊடாக, மகாகவி பாரதியார் படைப்புக்கள் வரை இதனைப்பார்க்கலாம்.

கலை இலக்கியம் கிள்ளுக்கீரையல்ல; போதையூட்டும் சோம்பேறிகளை உற்பத்தி பண்ணும் சாதனங்களுமன்று: மகாபாரதம், ராமாயணம்போன்ற காவியங்களைப் பெயர்த்து வந்து 'நாரதர்', 'ராமர்' வாயிலாகப் பூமிக்கு மந்திரம் சொல்லுவிக்கும் உபதேசமுமில்ல. அவை சமுதாயத்தை விமர்சிப்பதோடு உன்னத வாழ்க்கைக்கு வழிகாட்டவும் அதனை மாற்றியமைக்கவும் போதமூட்டி நிற்பவை.

கலைஞன் - எழுத்தாளன் என்று தன்னை வரித்துக் கொள்ளும் ஒருவர் சாதாரணமான இந்த அடிப்படை அமசத்தையாவது தெரிந்து கொள்ளாமல் கலை இலக்கியக் களத்தில் பிரவேசிப்பின் கத்தி எடுத்த கசாப்புக் கடைக்காறர் போன்றே சமூகத்தில் ஊசலாடுவர். இந்தக் கசாப்புக்கடைக்காறர் வேலையைத்தான் மிகப் பெருவாரியான தமிழ்ச் சினிமாவும் நாடகங்களும் இலக்கியங்களும் இதுகாலும் செய்து வருகின்றன.

"தனக்குத்தெரியாத சிங்களம் தன் பிடரிக்குச் சேதம்" என்று இலங்கையில் ஒரு பழமொழி உண்டு. சமுதாயத்தைப் பற்றிய விஞ்ஞான பூர்வமான எந்தவித யதார்த்தக் கண்ணோட்டமோ, பொறுப்புணர்வோ, மனித நேசிப்போ இன்றிப் பலர் தங்களைக் "கலை இலக்கியவாதிகள்" என்று வரித்துக் கொண்டு கசாப்புக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடைக்காறர் வேலையில் இறங்கியதால்தான் கலை இலக்கியக் களும் இத்தகையோர்க்குப் "பொழுது போக்குச் சாதனங் களாக"த் தெரிகின்றன. இதில் வேடிக்கை என்னவென்றால், உலகாழ்ந்து போயிருக்கும் இன்றியமையாத "வர்க்கப் பிரிவினை' களைக் கொஞ்சமும் கணக்கிலெடுக்கத் தெரியாத இனப்பகைவர் களும், மொழிவெறியர்களும், மதப்பித்தர்களும் உலகளாவிய கலை இலக்கியம் பற்றிப் பேசுவதுதான்.

உண்மையில் நிர்வாணம் ஆபாசமல்ல. அது, நோக்கும் தன்மையைப் பொறுத்தது. ஆனால் தனக்குத் தெரியாத ஒன்றைத் தெரிந்ததாகப் பாசாங்கு செய்யும் கிருத்தியங்களே சுத்த ஆபாசம். இந்த ஆபாசப் பேர்வழிகளே "கலை இலக்கியம் பொழுது போக்கிற்காக" என்னும் சுலோகத்தை விளம்பரமாகவும் முன்வைத்து வியாபாரம் நடத்துகின்றனர். ஆனால் மானிடக்கலை இலக்கியவாதியோ வியாபாரியல்ல; அவன் ஓர் சமுதாய விஞ்ஞானி. சமுதாயத்தை ஆய்வு செய்து, மக்கள் உணர்வுகளைப் பகிர்ந்து, மக்களிடம் கற்று, பொறுப்போடு கலை இலக்கி யங்களை மக்களுக்கு அர்ப்பணிப்பவன். அவன் கலை இலக்கியங் கள் விலைபோகலாம். அவன், விலை போகாதவன்.

"பொழுது போக்குக்குக் கலை இலக்கியங்கள்" என்று சொல்லப்படும் படைப்புக்கள் கலாம்சத்தில் சிறந்து விளங்கினும் அவை எந்த வர்க்க நலனிற்குத் துணைபோகின்றன என்பதைப் புரிந்து கொள்ளும் ஒருவரால்தான் அவற்றின் அபாயங்களையும் தெரிந்து கொள்ள முடியும். இதன் சரியான அர்த்தம், கலை இலக்கியங்கள் ஒரு போதும் பொழுது போக்குச் சாதனங்களாக இருப்பதில்லை என்பது மட்டுமல்ல, அவை எப்போதும் ஏதாவது ஒரு வர்க்கச் சார்புவாதமாக இருப்பதுதான்.

பாட்டாளி வர்க்கச் சார்புவாதக் கலை இலக்கியங்களும் முதலாளித்துவச் சார்புவாதக் கலை இலக்கியங்களும் எப்போதும் "நேரெதிர் விரோதமுரண்பாடு" கொண்ட கருவூலங்கள் என்பதை நாம் அறிவோம். இது போன்றே பொழுது போக்குக் கலை இலக்கியங்களும் மக்கள் கலை இலக்கியங்களும் இரு துருவச் சார்புவாதங்களாகத் திகழ்கின்றன. இவையிரண்டும் ஒரே சார்புவாதக் கலை இலக்கியங்களாக ஒரு போதும் இருப்ப தில்லை. இந்த அடிப்படை நெறியினைத் தெரிந்து கொள்ளாத ஒருவரே "கலை கலைக்காக" என்றும், "நடுநிலவாத நற்போக்குக் கலை இலக்கியம்" என்றும் இருப்பதாகக் கூறுவர். எந்தக் கருது கோள்களிலும் வர்க்கச் சார்பு இருப்பதை இவர்கள் நோக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வதில்லை. இதனால்தான் இந்தத் துறையே வணிகத் தன்மையா கின்றது.

அன்றாடம் கஷ்டப்பட்டு உழைத்து, உடலயர்ந்து மனம் சோர்ந்து போகின்றவர்களைக் கொஞ்ச நேரமாவது இன்பத்தில் அல்லது மகிழ்ச்சியிலாழ்த்தும் பொருட்டே தாங்கள் கலை நிகழ்ச்சிகளை, இலக்கியங்களை வழங்கி வருவதாகக் கூறும் இவர்கள், இவ்விதமான உத்தரிப்புக்களிலிருந்து மக்கள் மீள என்ன கருத்தை அவற்றின் வாயிலாக முன்வைக்கின்றார்கள்?. இங்கேதான் இவர்களின் ஆற்றாமை அல்லது அறியாமை அல்லது சமுதாயப் பொறுப்பற்ற தன்மை வெளிப்படுகின்றது.

சமூகத்தில் உள்ள குடும்பங்களையும் தனிமனிதர்களையும் சமு தாயத்திலிருந்து பிரித்தெடுத்து, ஆரணியம் குப்புசாமி போல் குடும்ப வினோதங்களை, அவர்களின் உல்லாச வாழ்க்கை, கேளிக்கை, வறுமை, தோல்விகள், வெற்றிகள், வீரதீர சாகசங்கள், கண்ணீர்ப் பிரலாபங்கள், துன்பதுயரங்கள், காதல் லீலைகள், களியாட்டங்கள் என்றான இன்ன பிறவெல்லாம் ஏதோ அவர்கள் தலையில் விதிக்கப்பட்ட வாழ்க்கை முறையாகக் கொண்டு கேளிக்கையாகச் சிரித்து, அனுதாபங்களால் கண்ணீர் சொரிந்து காட்டி, சமூகத்தில் எப்படியாவது ஓர் "அந்தஸ்தை"ப் பெற்று வாழத் துடித்து அங்கலாய்க்கின்ற கோலநிலை - இந்தக்கோலம் கலை இலக்கிய உலகின் அவதானத்திற்குட் பட்டுவருகிறதேயன்றி, யதார்த்தப் பார்வையில் விஞ்ஞான பூர்வமாக விமர்சிக்கப்படவில்லை. இதனால்தான் காமக் களி யாட்டச் சினிமாக்களும், கற்பனா உலகு பற்றிய பக்திப்பாடல்களும், செல்லரித்துப்போன வீராவேச வசன நாடகங்களும் "பொழுது போக்குச் சாதனங்கள்" என்ற கோதாவில் வணிகக் கலை இலக்கிய வாதிகளால் மக்கள் மத்தியில் போதை வஸ்துக்களாக ஊட்டப்பட்டு வருகின்றன.

சமுதாயத்தில் இத்தகைய சந்ததியை உற்பத்தி பண்ணும் பொழுது போக்குக் கலை இலக்கியவாதிகளின் கலைச்சேவை, விழலுக்கிறைத்த நீராவதோடு அவர்களைப் பணம் பண்ணும் வித்தைக்கு இட்டுச் செல்லுமே தவிர, சமுதாயத்துக்கும் படு நாசத்தையே விளைவிக்கும்.

இனி விஷயத்திற்கு வருவோம்.

"புரட்சிகரமான தத்துவம் இல்லாமல் புரட்சிகரமான இயக்கம் எதுவும் இருக்க முடியாது" என்ற யதார்த்த பூர்வக் கருத்திய லையும் , ஏதாவது ஒன்றைப்பற்றி நாம் பெறும் அறிவே தத்துவம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பதையும் அறிவோம். புரட்சி என்றால் அடிபிடி, சண்டை, கலகம், அராஜகம் என்றே மிகப் பலர் தவறாகக் கருதுகின்றார்கள். "புரட்சி" என்ற பதத்தை முதலில் தமிழிற் சொன்னது, மகாகவி பாரதிதான். எதனிலும் மாற்றத்தைக் குறிக்கும் நிலை, நிகழ்ச்சியே புரட்சி. 1917ம் ஆண்டு சோவியத் ரஷயாவில் நிகழ்ந்த சமுதாய மாற்றத்தை, "ஆகாவென்றெழுந்தது பார் ஜெகப்புரட்சி" என்றே பாரதி சொல்கிறார். அது, ரஷயாவில் மட்டுமன்று, உலகளாவப் பரவப்போகும் தவிர்க்க முடியாத நிகழ்ச்சி என்பதனையே "ஜெகப்புரட்சி" என வர்ணிக்கின்றார். இத்தனைக்கும் பாரதி லோகாயத இயக்கவியற் தத்துவத்தைப் படித்தவரோ புரிந்தவரோ தெரிந்தவரோ அல்லர். இதில் பாரதியின் ஆய்வார்ந்த உலகக் கண்ணோட்டத்தைப் பார்க்கின்றோம். இந்தக் கருத்தியல் பாரதியிடம் எப்படி வந்தது?

தன்னாதிக்கவுணர்வு வாதத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு முழு மனிதத்தை நோக்கி அவர் பார்வை தன்னாலியன்றவரை சமுதாயத்தை விஞ்ஞானத் துணைகொண்டு ஆராய்கின்றது. மதக்கோட்பாடுகளையும், அதன் அனுஷ்டானங்களையும் "பொய்மை"யாகப் பார்க்கின்றது; ஜாதி, மத, குல, வர்ணத்தை நிராகரிக்கின்றது; மனித குலத்தை ஒரு "சமதர்ம சமாஜ வாழ்வாக"ப் பார்க்கின்றது. எனவே, அவர் தான் காணும் அன்றைய இந்தியாவையும் "முப்பது கோடிக்கும் பொதுவுடமை" என்கின்றார். இதனை நடைமுறைப்படுத்துவதற்கு "ஆசை" மட்டும் போதாது. அதற்கான தத்துவம் என்னும் கருத்தியல் சரியாக இணைய வேண்டும். ஆசை கருத்தியல் அல்ல என்பதில் அவர் போதம் பெற்றிருக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் அவர் தன்னிச்சாபூர்வவாதியாகவன்றி, உலக ஞானம் கொண்டிருந்தார்.

அழகியல் என்னும் வடிவம் தத்துவமாகாது. தத்துவம் என்ற கருத்தியலே அழகியலை மெருகூட்டுகின்றது. கலை இலக்கியங்களில் உருவமும் உள்ளடக்கமும் இணைவதாய்தான் அவை முழுமையான இலக்கிய அந்தஸ்தை அடைகின்றன.

கற்பனாலோகவாதம் வளர்த்த ஆன்மீகம் மனிதர்களை அறிவிலிகளாக்கியது. அதேவேளை விஞ்ஞான வளர்ச்சியின் வேகம் மனிதர்களின் விவேகத்தை வளர்த்திருக்கின்றது; தொழிற் புரட்சியைத் தோற்றுவித்திருக்கின்றது; சகல மதக்கோட்பாடுகளையும் அனுஷ்டானங்களையும் பொய்மையாக்கி நிரூபித்திருக்கின்றது; ஜாதி மத குலத்தை நிராகரித்து மனித குலத்தை ஒரு சமதர்ம உலக வாழ்வாகப் பார்க்கின்றது. இதன் விளைவாகக்

www.tamilarangam.net

கலை இலக்கிய வெளியீட்டுக் கருவிகளான உபகரணங்களும் வளர்ச்சியடைந்துள்ளன. யந்திர சாதனங்களின் நவீன வளர்ச்சி, திரைக் கலையை உன்னத நிலைக்குக் கொண்டு வந்திருக்கின்றது.

யதார்த்த நிலை இப்படி இருக்க, சமுதாயத்தின் முன்னேற்றத் திற்காக இவற்றைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக இவற்றையே முதலீடாக வைத்து, கலை இலக்கிய வாதிகள் கருத்தியல் ரீதியாக ஆன்மீக வாத வேட்கைக்கு இரையாகி, சுரண்டும் ஆதிக்கப் போட்டியில் இறங்கியதாலேயே அவர்களின் கலை இலக்கியக் கருவூலங்கள் அழிவுகளையும் நாசங்களையும் நாட்டில் விளைவிக்கின்றன. கலை இலக்கிய உருவ வடிவங்கள் கருத்தியலான உள்ளடக்கத்தோடு இணையாமல் அழகியலோ ஆரோக்கிய இலக்கியங்களோ வளர்வதற்கில்லை. எனவே, கலை இலக்கியப் படைப்புகள் வணிகர்களிடமிருந்தும், விளம்பரதாரர்களிடமிருந்தும், ஆன்மீக வாதிகளிடமிருந்தும் முற்றாக விடுவிக்கப்பட்டு விஞ்ஞானபூர்வ ஆய்வுக்குத் திரும்பாதவரை, பிற்போக்குக் கருத்தியலே உள்ளடக்கத்திலும் புற்றுநோயாகப் பரவும். இதனைக் கருத்திற் கொண்டு முற்போக்குக் கலை இலக்கிய உலகம் தனது கருத்துருவத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

'தத்துவம், சித்தாந்தம், சோசலிசம், பூர்ஷ்வா வர்க்கம், கற்பனாவாதம், பொருள்முதல்வாதம், எண்ண முதல்வாதம், வர்க்க சார்புவாதம் என்றெல்லாம் வரும் பதப்பிரயோகங்களை யும், இப்பதங்களுக்கான அர்த்தங்களையும் புரிந்தோ ஜீரணிக்கவோ முடியவில்லை. இவையொன்றும் கலை இலக்கியங்களுக்குத் தேவையற்ற "இஸங்கள்"; அரசியல் வேறு கலை இலக்கியம் வேறு; இவற்றையெல்லாம் கலை இலக்கியத்திற்குள் போட்டுக் குழப்பியடிக்க வேண்டியதில்லை; என்றெல்லாம் பல விமர்சகர்கள் சலித்துக் கொள்வதை நாம் அடிக்கடி அவதானித்து வருகின்றோம். "தானே உலகம்" எனத் தன்னுள் வரித்துக் கொண்டு தன்னிச்சாபூர்வ இலக்கியக்காறர்களான "கலை கலைக்காக" என்னும் அழகியல்வாதிகளும் இவ்வாறு நச்சரிப்பதை யும் நாம் அறிவோம்.

கலை இலக்கியம் வாழ்க்கையிலிருந்தே தோன்றுகின்றது. அந்த வாழ்க்கை முறையே அரசியலோடும் தத்துவ சித்தாந்த இயக்கத்தோடும் பின்னிப் பிணைந்த ஒன்றாக இருக்கின்றது. அரிசி இல்லாமல் சோறு சமைக்க முடியாது. அது போன்றே அரசியல் தத்துவங்கள் இல்லாமல் இலக்கியம் உயிர்த்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிற்காது. கலை இலக்கியங்களுக்கு அரசியலே ஆதாரம். அரசியல்தான் கலை இலக்கியத்தின் உயர்ந்த வடிவமுமாகும்.

ஒரு துறைசார்ந்த விஷயங்களில் நாம் எவற்றைப் புரியாதிருக்கின்றோமோ அவற்றையே தேடித் தெரிந்து கொள்ள வேண்டும். அதுதான் அறிவு வளர்ச்சி. இதனை விடுத்து, நமக்கு புரியாதவற்றைப் புறக்கணித்துக் கொண்டால் விலங்குகளுக்கும், மனிதர்களுக்கும் என்ன வித்தியாசம்? கலை இலக்கியங்கள் வாழ்க்கை அனுபவங்களிலிருந்தும் மக்கள் பரிபாஷைகளைப் புரிந்து கொள்வதிலிருந்தும் உத்வேகம் பெறுவதாதலால், நாம் தெரியாத ஒன்றையே கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டும். தத்துவங்கள் இல்லாமல் அரசியல் இல்லை. தத்துவமும் அரசியலும் பின்னிப் பிணைக்கப்பட்டவை. தத்துவமற்ற யந்திர ரீதியான அரசியல் அராஜகத்தை விளைவிக்கும். இயக்கவியல் இதனை அழகாக விளக்குவதை அவதானிக்கலாம். துப்பாக்கிகளிலிருந்து அரசியல் பிறப்பதில்லை; அரசியலிருந்தே துப்பாக்கிகள் வெடிக்கின்றன. அரசியல் துப்பாக்கிகள் தாமாகவே ஸ்தம்பித்து விடும். ஆக அரசியலைப் புறக்கணித்து விட்டுச் சுத்த சுயம்புவான கலை இலக்கியத்தை எவருமே படைக்க முடியாது.

பொறி பறக்கின்ற வீராவேச வசனங்களால் மிகப் பிரமாண்டமான கட்டிடங்களையும் இரும்புச் சங்கிலிப் பிணைப்புகளையும் தகர்த்தெறிகின்ற தி.மு.கவின் விஞ்ஞானத்திற்குப் புறம்பான கற்பனாவாத அரசியலையோ, தத்துவார்த்த போதங்களால் மதக்கோட்பாடுகளை நிராகரிக்கின்ற மெஞ்ஞான மார்க்கத்தை விடுத்து, மத அனுஷ்டானங்களை ஒழிக்கும் ஆவேசத்தில் வீதிகளில் உள்ள பிள்ளையார் சிலைகளுக்குச் செருப்பால் அடித்து மதபக்தர்களை மேலும் வெறியர்களாக்கி மேன்மேலும் பிள்ளையார் சிலைகளைத் தோற்றுவிக்கும் பேதமையான தி.க.வின் யந்திரரீதியான அரசியலையோ, அது சார்ந்த கலை இலக்கியம் பற்றியோ நாம் இங்கே குறிப்பிடவில்லை; சம்பந்தப் படுத்தவுமில்லை. சகல கலை இலக்கிய அரசியல் இயக்கங்களும் இயக்கவியல் சார்ந்த சமூக விஞ்ஞான ஆய்வோடு இணைந்து முனைப்புப் பெறவேண்டும் என்பதனையே குறிப்பிடுகின்றோம். இதனை அழுத்தியும் கூறுகின்றோம்.

"கலையும் இலக்கியமும் மக்களுக்காக" என்னுங் கூற்றினையும் அவற்றின் தாற்பரியங்களையும் அடுத்த இதழில் ஆராய்வோம்.



★

www.tamilarangam.net



வெளியீடு: கலை, இலக்கிய வாசகர் வட்டம், பாரிஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்